# நக்கல் நமசிவாயம்






# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 318 பிலவ வருடம், ஆவணி மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை (02.09.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 23, 0115886187 - பக்கங்கள் 09

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இடைநிறுத்தம்

02



## ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு - ஜனாதிபதியிடம் கோரினார் சஜித்!



சிறைவாசம் அனுபவித்துவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பை வழங்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஜனவரி 12, 2021 முதல் இன்றுவரை 232 நாட்களாக சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார். ரஞ்சன் ராமநாயக்க ஒரு நேர்மையான மனிதராகவும், உண்மையைப் பேசும் மனிதராகவும் பரவலாகக் கருதப்படுகிறார். ஒரு கலைஞராக ரஞ்சன் ராமநாயக்க பல ஆண்டுகளாக மிகவும் பிரபலமான நடிகராகத் திகழ்வதோடு, அவர் மக்கள் சார்பான கலைஞராக புகழ்பெற்றுள்ள அதேசமயம், பல சமயங்களில் அரசியல்வாதியாக அதிக வாக்குகளால் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவருமாவார்.

அவர் அரசியலில் அல்லது வேறெந்த முறைகேடான நடவடிக்கைகளிலும் அல்லது...



02

# அவசரகால சட்ட அமுல்;
# இராஜதந்திரிகள் கடும் அதிருப்தி!

## சமாளிக்க தடுமாறுகிறது அரசு

02

## அவசரகால நிலையை நீக்கி அனர்த்த முகாமை சட்டத்தின்படி செயற்படுக!

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



அவசரகால நிலை அறிவிப்பை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2021 ஓகஸ்ட் 30ஆம் திகதியிட்ட அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு எண் 2243/01 மூலம் கொவிட் -19 தொற்றுநோய் சூழ்நிலையின் அடிப்படையில் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பகுதி 2ஐ அமுல்படுத்துவதன் மூலம் ஜனாதிபதி அவசரகால நிலையை அறிவித்ததாகத் தெரிகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பு என்று பெயர் குறிப்பிடுவதுபோல் தொற்றுநோயால் ஏற்படும் சூழலை விட பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சூழ்நிலைக்கு அதன் ஏற்பாடுகள் மிகவும் பொருத்தமானவை.

02

## பாவனைக்குதவாத பால்மாக்கள்; கொழும்பில் திடீர் சோதனை

### 3 களஞ்சியசாலைகளுக்கு சீல்!

கொழும்பு, புறக்கோட்டைப் பகுதியில் மனித பாவனைக்கு உதவாத பால்மாக்களை களஞ்சியப்படுத்தியிருந்த மூன்று களஞ்சியசாலைகளுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய குறித்த இடத்தைச் சுற்றிவளைத்த அதிகாரிகள், மூன்று களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைத்துள்ளனர்.

கொழும்பு வேல்ல வீதி, கதிரேசன் வீதி ஆகிய பகுதிகளிலுள்ள களஞ்சியசாலைகளுக்கே...

02

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைசெய்ய விசேட குழு



### பிரதம நீதியரசரால் நியமிப்பு

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் தலைவராக மேல் நீதிமன்ற நீதிபதி...

02

## அமைச்சரவை உபகுழுவின் யோசனையை ஏற்கவேண்டும்;

### 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெசிலின் திட்டமே

### ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு விமல் வீரவங்ச தெரிவிப்பு

*(யோ.தர்மராஜ்)*

வரவு–செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரையான இரண்டு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குமாறு உப குழு பரிந்துரைக்கவில்லை. மாறாக, ஆசிரியர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் நிதி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனையாகும். எவ்வாறாயினும், 5 ஆயிரம் கதையை புறந்தள்ளி, உப குழு முன்வைத்த பொதுவான தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறு...

02



## தென்னாபிரிக்க திரிபு இலங்கையில் ஊடுருவும் வாய்ப்புகள் அதிகம்

### விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

*(யோ.தர்மராஜ்)*

தடுப்பூசிகளுக்கு எவ்வித பிரதிபலனையும் வழங்காது அதற்கு எதிராக செயற்படக்கூடிய வகையில் தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட புதிய திரிபு இலங்கையில் ஊடுருவுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகவுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

02

## நாட்டை மேலும் இரண்டு வாரங்களுக்கு முடக்கவேண்டும்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

தற்போதைய நிலைப்பாட்டின் அடிப்படையில் இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டம் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்படவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலங்கையில் நாளொன்றுக்கு ஐந்தாயிரம் பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், சுமார் ஐம்பதாயிரம் பேர் சமூகத்தில் கொரோனா நோயாளர்களாக காணப்படுவதாக...

02

## கொரோனா அச்சுறுத்தல்; 5 நாட்களில் 1028 மரணங்கள்

*(யோ.தர்மராஜ்)*

**நாட்டில் கொரோனா தொற்று தீவிரத்தால் நாளுக்கு நாள் மரணங்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை 9 ஆயிரத்துக்கு மேற்பட்ட கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில், 5 நாட்களில் ஆயிரத்து 28 மரணங்கள் பதிவாகியுள்ளன.**

**டெல்ட்டா திரிபினால் நாட்டில் மீண்டும் கொரோனா நோயாளர்கள் அதிகரிப்பதுடன், மரணங்களும் 200ஐ தாண்டியுள்ளன. அதன்படி, 30ஆம் திகதி பதிவான 194 மரணங்களுடன் மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ...**

02

## அரிசி, சீனிக்கு இன்று முதல் கட்டுப்பாட்டு விலை அமுல்

*நா. தினுஷா*

அரிசி மற்றும் சீனி ஆகியவற்றுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதன்படி, இன்றைய தினம் முதல் அரிசி மற்றும் சீனி ஆகியவற்றுக்கு கட்டுப்பாட்டு விலையை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இதனைக் கூறியிருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த சில தினங்களில் சந்தையில் சீனி மற்றும் அரிசி என்பற்றின் விலையானது வரையரையற்ற வகையில் அதிகரித்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. அதற்கமைய, இந்த விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு வர்த்தக அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனிக்கு நிர்ணய விலை விதிக்கப்பட்டிருந்தாலும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படவில்லை. அதனடிப்படையில் இதுதொடர்பில் பல்வேறு...

02

## சீமெந்து விலை உயர்வு

**நாட்டில் சீமெந்து விலை சடுதியாக அதிகரித்துள்ளது.**

**ஒரு மூடை சீமெந்து 950 ரூபா முதல் 1,005 ரூபாவரையில் சந்தையில் முன்னதாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், தற்போது சீமெந்து மூடையொன்றின் விலை 1,100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.**

**இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபையிடம் வினவிய போது,**

**நாட்டின் பல...**

02

## கைப்பற்றப்பட்ட சீனி அரசுடைமையானது

நுகர்வோர் அதிகாரசபையினரால் களஞ்சிய சாலைகளில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட சீனி அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

வத்தளை, மாபோல பகுதியிலுள்ள களஞ்சிய சாலையில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 4,800 மெற்றிக் தொன் சீனியை நுகர்வோர் அதிகாரசபை நேற்று பொறுப்பேற்றுள்ளது.

இதற்கமைய, இந்த சீனி தொகையை சதொச மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் ஊடாக பொதுமக்களுக்கு...

02





## மனிதம் தொலைத்த மானுடர்கள்; நூரளையில் கைவிடப்பட்ட மூதாட்டி

நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள வாரச்சந்தையில் 75 வயதான தாய் ஒருவர் கைவிடப்பட்டுள்ள நிலையில், காணப்படுவதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மூதாட்டியின் பராமரிப்பாளர் தொடர்பாக எதுவும் சொல்லாத தாய், தான் நுவரெலியாவில் மகஸ்தோட்ட, லபுக்கலை பகுதிகளில் வசித்ததாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பகுதியில் அமைந்துள்ள வாராந்த சந்தை வளாகத்தில் பாதுகாவலர் இல்லாமல் வயதான தாய் ஒருவர் இருப்பதாக அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களால்...

02

# ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேசக ஐக்கியத்துவம் (NCEASL) அதன் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் (ADT) நிவாரணம் மற்றும் அபிவிருத்தி பிரிவினூடாக நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை ஒப்படைத்தது.

இந்த உபகரணங்களில் ஒரு உயர் ஓட்ட ஒட்சிசன் செறிவூட்டி மற்றும் ஒரு 10 லீற்றர் ஒட்சிசன் செறிவூட்டல் ஆகியவை அடங்கும்.

கொவிட் -19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகள் மற்றும் நிலையங்களுக்கான மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக NCAESL மற்றும் ADT யினால் ஆரம்பிக்கப்பட்ட "உயிர்களை பாதுகாப்போம்" எனும் முயற்சியின் ஒரு பகுதியாக இக் கருவிகள் ஒப்படைக்கப்பட்டன.

இம் முயற்சியில் மேலதிகமாக, NCEASL மற்றும் ADT ஆகியவை நாடு முழுவதும் 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் மற்றும் நலிவுற்ற சமூகங்களுக்கான சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஆதரவளித்து வருகின்றன. குறிப்பாக, வட மாகாணத்தில் ADT யானது 4ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு விதைகள் மற்றும் நாற்றுகளுடன் சமூகங்களிடையே வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிப்பதற்காக உதவிபுரிந்து வருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா வினால் இத்தொகுதி உபகரணங்கள் பெறப்பட்டது. மேலும், இந்நிகழ்வின்போது வைத்திய சாலையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் வருகை தந்திருந்தனர்.

இவ் உபகரணங்கள் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் இயக்குநர் ரகு பாலச்சந்திரனால் கையளிக்கப்பட்டன.

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் 27 பேருக்கு கொவிட்

## 80 பேர் தனிமைப்படுத்தலில்

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 27 பேர் இதுவரை கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளானோருடன் தொடர்பு கொண்டிருந்ததால், 80 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, சிறு ஏற்றுமதி பயிர்களின் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர மற்றும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன ஆகியோர் இந்தப்பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் மனைவிகள் மற்றும் பிள்ளைகளும் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

95 சதவீதத்திற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற பணியாளர்கள், பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பொலிஸார் என 30பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

## அரிசி, சீனிக்கு...

சுற்றிவளைப்புகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த சுற்றிவளைப்புகளினால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. அதற்கமைய, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையினால் பொருளொன்றுக்கான நிர்ணயவிலை அறிவிக்கப்பட்டதன் பின்னர், அந்த நிர்ணய விலைக்கு அதிக விலையில் விற்பனை செய்யப்படுமாக இருந்தால் இதற்கு முன்னர் அறவிட்ட 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் ஒரு இலட்சமாக அதிகரிக்கப்படும். அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனி மற்றும் அரிசி ஆகியவற்றை நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடு பூராகவுமுள்ள கூட்டுறவுகள் மற்றும் சதொச ஆகியவற்றில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனி ஒரு கிலோவை 130 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

களஞ்சியத்திலுள்ள சீனி மற்றும் அரிசி இன்றிலிருந்து (02) நாடுபூராகவுமுள்ள சதொச மற்றும் 320 கூட்டுறவுகளுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அநேகமாக இன்று அல்லது நாளை சதொச அல்லது கூட்டுறவுகளில் சீனியை புதிய விலையில் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று மிக விரைவில் மொத்த சந்தையில் சீனியின் விலை குறைக்கப்படும் என்பதுடன் இன்று(02) சீனி மற்றும் அரிசி என்பவற்றுக்கு நிர்ணய விலை அறிவிக்கப்படும் என்றார்.

## சீமெந்து...

பகுதிகளில் சீமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக தமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்தார். அத்துடன், சீமெந்தின் விலையினை அதிகரிப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது அதிகார சபையினால் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

## பாவனைக்குதவாத...

இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த களஞ்சியசாலைகளில் இருந்து புறக்கோட்டையிலுள்ள மொத்த வியாபார நிலையங்களுக்குப் பால்மா பைக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மொத்தமாக ஆயிரத்து 900 கிலோ பால்மா பைக்கற்றுகளுடன் களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன. களஞ்சியசாலைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு புறக்கோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஈஸ்டர்...

தமித் தொட்டவத்த நியமிக்கப்பட்டுள்ளதுடன், அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மௌலவிகள் உள்ளிட்ட 25 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்குகள் இந்த விசேட குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நயினை...

யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இவ்வருடம் நடைபெறாது என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

வரலாற்று பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய, வருடாந்த மஹோற்சவம் கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவிருந்த நிலையில், கொரோனாஅச்சம் காரணமாக இம்மாதம் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தற்போதும் நாட்டில் கொவிட் தொற்றுப் பரவல் அதிகரித்துச் செல்வதால், முன்னர் ஒத்திவைக்கப்பட்டதைப் போன்று இம்மாதம் 06 ஆம் திகதி மஹோற்சவத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

இதனால் இவ் வருட மஹோற்சவம் கொவிட் தொற்றுப் பரவல் அதிகரித்துச் செல்வதால், இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவசரகால சட்ட...

*(நமது விசேட செய்தியாளர்)*

அத்தியாவசிய சேவைகளின் அமுலாக்கம் என்ற பெயரில் அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு எடுத்துள்ள தீர்மானம், கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளதாக அறியமுடிகின்றது.

இது தொடர்பில் அவர்கள் அரச தரப்புகளிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது .

அத்தியாவசிய சேவைகள் என்ற பெயரில் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வரும்பட்சத்தில் அது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் பிரயோகிக்கப்படலாமென்ற அச்சத்தை இராஜதந்திர வட்டாரங்கள் அரசிடம் கோடிட்டு காட்டியுள்ளன.

ஐ.நா வதிவிட அலுவலகங்கள், மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் இதுதொடர்பில் தமது நாடுகளுக்கு அறிவித்திருப்பதாக உயர்மட்ட வெளிநாட்டு இராஜதந்திரியொருவர் நேற்றிரவு தமிழன் செய்திகளிடம் தெரிவித்தார்.

## மனிதம் தொலைத்த...

பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் நுவரெலியா பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த வயதான தாய் தொடர்பாக அடையாளத்தை உறுதிசெய்து கொள்வதற்காக நுவரெலியா பொலிஸாரினால் விசேட குழு ஊடாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

## கைப்பற்றப்பட்ட...

விற்பனைசெய்வதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கவுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

## நாட்டை மேலும்...

மருத்துவ நிபுணர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தினை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என்பது தனது தனிப்பட்ட கருத்து என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொரோனா அச்சுறுத்தல்...

9 ஆயிரத்தைத் தாண்டி, 9 ஆயிரத்து 185 ஆக பதிவாகியது.

இதேவேளை, நாட்டில் இறுதி 10 நாட்களில் 2 ஆயிரத்து 2 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், ஓகஸ்ட் மாதம் மாத்திரம் நாட்டில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 463 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் முதல் ஆயிரம் கொரோனா மரணங்கள் பதிவாகுவதற்கு 2020.03.29 ஆம் திகதி தொடக்கம் 2021.05.19 ஆம் திகதி வரை 13 மாதங்கள் சென்றாலும் இறுதி 2 ஆயிரம் மரணங்கள் பதிவாகுவதற்கு 10 நாட்களே சென்றுள்ளன. அத்தோடு, இறுதி ஆயிரம் மரணங்கள் பதிவாகுவதற்கு 2021.08.26 ஆம் திகதி தொடக்கம் 2021.08.30 ஆம் திகதி வரை வெறுமனே 5 நாட்களே சென்றுள்ளன.

முதல் ஆயிரம் மரணங்களுக்கு 13 மாதங்களும் ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 23 நாட்களும் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 19 நாட்களும் 3 ஆயிரம் தொடக்கம் 4 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 23 நாட்களும் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 13 நாட்களும் 5 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 8 நாட்களும் 7 ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் மரணங்களுக்கு 5 நாட்களும் சென்ற நிலையில் இறுதி 8 ஆயிரம் தொடக்கம் 9 ஆயிரம் மரணங்களுக்கு 5 நாட்களுமே சென்றுள்ளன.

அதன்படி, 26 ஆம் திகதி 214 மரணங்களும் 27 ஆம் திகதி 212, 28 ஆம் திகதி 192, 29 ஆம் திகதி 216, 30 ஆம் திகதி 194 மரணங்களுமாக 5 நாட்களில் ஆயிரத்து 28 மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, ஓகஸ்ட் மாதம் மாத்திரம் நாட்டில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்துக்கு அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, ஓகஸ்ட் மாதம் இறுதி நாளான 31 ஆம் திகதி 4 ஆயிரத்து 221 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், ஓகஸ்ட் மாதத்தில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 463 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் இதுவரை 4 இலட்சத்து 40 ஆயிரத்து 302 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவை...

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் என அமைச்சரவையின் உபக்குழு உறுப்பினர் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சங்கங்கள் கூறுவது போன்று அவர்களுடைய சம்பள முரண்பாடானது 24 வருடங்களுக்கு மேலாக தொடர்கின்றது. அதன்படி, எங்களுடைய ஆட்சியில் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், கொரோனா தொற்றினால் அரசாங்கத்தின் முக்கிய பிரச்சினைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன்படி, சுகாதாரத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதுடன், பொருளாதாரத்திலும் பாரிய நெருக்கடி ஏற்பட்டது.

இந்த நிலையில், ஏனைய துறையினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன்படி, அந்த குழு சங்கங்களுடன் அதிக பேச்சுவார்த்தைகளை நடத்தி, இரு வாரங்களில் குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தோம். அதன்படி, குழுவின் அறிக்கையை கொள்கை ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உப குழுவினால் முன்வைக்கப்பட்ட சம்பள முரண்பாடுகளுக்கான தீர்வை 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் இணைத்து கட்டம் கட்டமாக தீர்ப்பதற்கும் அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டது.

அமைச்சரவை உபகுழு சமர்ப்பித்த அறிக்கையின்படி, அதிபர்கள் சேவை 3(1) இற்கு சம்பளம் நூற்றுக்கு 19.54 வீதம் அதிகரிக்கும். இப்போது 35 ஆயிரமாகவுள்ளன. அது 42ஆயிரமாக அதிகரிக்கும். அதிபர் சேவை 2 இற்கு தற்போது 42 ஆயிரமாகவுள்ளது. அது நூற்றுக்கு 22 வீதத்தால் அதிகரித்து 48 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும்.

அதேபோன்று, எஸ்.எல்.பி.எஸ் சேவை ஒன்றிற்கு தற்போது 46 ஆயிரமாகவுள்ளது. அது நூற்றுக்கு 25 வீதத்தால் அதிகரித்து 58 ஆயிரத்து 345 ரூபாவாக அதிகரிக்கும்.

அதேபோன்று, ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பும் இதேபோன்று அதிகரிக்கும். எஸ்.எல்.பி.எஸ் சேவை 3(2) இற்கு தற்போது, 27 ஆயிரமாக இருக்கின்றது. அது 31 ஆயிரத்துக்கும் அதிகமாக உயரும். எஸ்.எல்.பி.எஸ் 3(1சீ) சேவைக்கு 16 வீதத்திற்கும் அதிகமாக சம்பளம் உயரும். அதற்குக் கீழே உள்ளவர்களுக்குக்கும் நூற்றுக்கு 19 வீதத்தால் சம்பளம் அதிகரிக்கப்படும். இறுதியாக, எஸ்.எல்.பி.எஸ் 3(1ஏ) சேவைக்கான சம்பளமும் நூற்றுக்கு 20.43 வீதத்தாலும் அதிகரிக்கப்படும். இந்த சம்பள உயர்வுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. மேலும், வரவு – செலவுத்திட்டத்தின் ஊடாக வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. மேலும், இது அரசால் வழங்கக்கூடிய மிக நியாயமான தீர்வாகும். எனினும், சுபோதினியின் பெயர் இல்லை என்று யாராவது கூக்குரலிட்டால் அது பொருத்தமற்றது. இதேவேளை, வரவு – செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரை இரண்டு மாதங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குமாறு உபகுழு பரிந்துரைக்கவில்லை. மாறாக, இது நிதியமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்த திட்டமாகும். குறிப்பாக, ஆசிரியர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலேயே இது முன்வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், 5 ஆயிரம் கதையை புறந்தள்ளி, உபகுழு முன்வைத்த பொதுவான தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறு இந்த நாட்டின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## தென்னாபிரிக்க திரிபு...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடுப்பூசிகளுக்கு எவ்வித பிரதிபலனையும் வழங்காது அதற்கு எதிராக செயற்படக் கூடிய வகையில் தென் ஆபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட புதிய திரிபு இலங்கைக்கு ஊடுருவுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகவுள்ளது. இதற்கு முன்னர் தென் ஆபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட திரிபு இலங்கைக்குள் உள்நுழையவில்லை. எனினும், எந்தவொரு திரிபும் இலங்கைக்குள் ஊடுருவுவதை தடுக்கமுடியாது.

குறிப்பாக, இவ்வாறான வைரஸ்களிலுள்ள திரிபுகள் வேறாக தென்படுவதில்லை. தற்போதுள்ள திரிபுகளும் சுகாதார துறையினால் வீழ்த்தக்கூடியதல்ல. ஆகவே, சுகாதார துறையை பாதுகாப்பாக வைக்கவேண்டுமாக இருந்தால் அடையாளம் காணப்படுகின்ற அனைத்து திரிபுகளிலிருந்தும் எங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, சுகாதார துறையினர் என்ற ரீதியில் நாங்கள் முன்வைக்க வேண்டிய அனைத்து பரிந்துரைகளையும் முன்வைக்கின்றோம். அதன்படி, தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள முடக்கம் தொடர்ந்து நீடிக்கப்படலாம் அல்லது தளர்த்தப்படலாம். எனினும், நாடு திறக்கப்படுகின்றது என்பது முழுமையாக வீதிகளில் இறங்கி, ஒன்றுகூடுவதல்ல. ஆகவே, நாடு திறக்கப்படுவதற்கு முன்னர் பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூடுவதை தடுக்கும் வகையிலான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

மாறாக, நாடு தளர்த்தப்பட்டு முறையாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து ஆரம்பத்திலிருந்து அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

அதேபோன்று, தற்போது அதிகரிக்கும் மரணங்களின் எண்ணிக்கை எப்போது குறையும் என்ற நாட்கணக்கை கூறமுடியாது. எவ்வளவு தடுப்பூசிகளை வழங்கினாலும் பாதிக்கக் கூடிய தரப்பினர் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளாதிருந்தால் பாதிப்புகள் அதிகரிப்பதோடு, மரணங்களும் அதிகரிக்கும் - என்றார்.

## ரஞ்சனுக்கு...

ஊழலிலும் ஈடுபடவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அரசியல் கட்சிகள் வேறுபாடுகள் இன்றி மதத் தலைவர்கள், மூத்த கலைஞர்கள், சட்ட அறிஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் அவரை விடுவிப்பதில் தலையிடுமாறு அழைப்பு விடுத்துள்ளதோடு, மேலும் இது போன்ற பல கோரிக்கைகள் உங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலைக்கு மத்தியில், ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை குறித்து நான் பலமுறை உங்களுக்கு அறிவித்துள்ளதோடு, அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களிடமிருந்து நான் பெற்ற நேர்மறையான பதிலை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

மேற்கண்ட தரப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை தொடர்பாக என்னிடம் பலமுறை கேட்டும் கோரிக்கைகளையும் விடுத்தவண்ணமுள்ளதோடு, அத்தகைய கோரிக்கைகள் நேர்மறையானவை மற்றும் நியாயமானவை என்று நீங்களும் நம்புகிறீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

அதன்படி, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவது தொடர்பாக உங்கள் நேர்மறையான பதிலை விரைவாக எதிர்பார்க்கிறேன் - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## அவசரகால நிலையை...

மறுபுறம், 2005 ஆம் ஆண்டின் சட்டம் எண் 13, இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் குறிப்பாக தொற்றுநோய் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட பேரழிவு சூழ்நிலைகளை கையாள வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், (உலக சுகாதார ஸ்தாபனம் கோவிட் -19 ஐ உலக தொற்றுநோயாக அறிவித்து கிட்டத்தட்ட 18 மாதங்களுக்குப் பிறகு) இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நாட்டில் பேரிடர் நிலைமை இருப்பதாக ஜனாதிபதி அறிக்கை ஒன்றைக்கூட வெளியிடவில்லை.

ஜனாதிபதி தலைமை வகிக்க முடியுமான ஏற்பாடுகள் உள்ள இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையைக் கொண்ட செயலணியை நிறுவுவதற்கான ஒரு வழிமுறை இருப்பதை நாங்கள் அதில் காண்பதோடு, அத்தகைய செயலணியை ஜனாதிபதி நிறுவ தவறிவிட்டார்.

மாறாக, தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்கு புறம்பாக ஒரு ஜனாதிபதி செயலணி உருவாக்கும் பாதை எடுக்கப்பட்டுள்ளது.

வைரஸ் பரவலுக்கு 18 மாதங்களை எட்டும் நிலையில், தொற்றுநோயைக் கையாள அரசாங்கம் தொடர்புடைய சட்டங்களைச் செயல்படுத்தத் தவறிவிட்டது என்பதையும் நாங்கள் கவனித்தோம். இந்த நோக்கத்திற்காக பல நாடுகள் சிறப்பு சட்டங்களைக் கூட இயற்றி செயற்பட்டுள்ளன.

இந்த நிலையில், பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசர கால நிலை அறிவிக்கப்படவில்லை என்பதோடு இந்த அறிக்கையை வெளியிடுவது குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மேலும் தவறாக சித்தரித்து சர்வாதிகாரத்தை நோக்கி மேலும் நகரும் என்ற உள்நோக்கத்துடன் கூறப்பட்டுள்ளதா என்பதிலும் நாங்கள் கூடிய கவனம் கொண்டுள்ளோம்.

அத்தியாவசிய சேவைகளின் செயற்பாடு மற்றும் மக்களுக்கு வழங்கப்படும் வழமையான நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் குறித்தும் வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ள அறிக்கை ஊடாக அத்தியாவசிய சேவைகள் மற்றும் வழமையான சேவைகளை வழங்குவதற்கு தடையாக உள்ளதா இல்லையா என்பதை நாங்கள் கவனிக்கிறோம்.

தடுப்பூசிகள், பரிசோதனை கருவிகள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட தேவையான நடவடிக்கைகளை சரியான நேரத்திலும் வெளிப்படையான முறையிலும் எடுக்க அரசாங்கம் தவறிவிட்டது என்பதை நாங்கள் அவதானித்துள்ளோம். விவசாய சமூகத்திற்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி, விவசாய பொருட்களை வாங்கத் தேவையான வசதிகளை விவசாய சமூகத்திற்கு வழங்க தவறிவிட்டுள்ளதோடு பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளை உயர்த்தியுமுள்ளனர்.

இது தவிர, அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் அரசாங்க வருவாயை இழந்துள்ளதோடு, வெளிநாட்டு கையிருப்பு குறைந்து வரும் நிலையில், இதன் விளைவாக எல்.பி.எரிவாயு மற்றும் பால் மா உட்பட பல அத்தியாவசிய பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது.

அதேபோல, இதனால் அரசாங்கத்திற்கு பெரும் இழப்பு (அல்லது வருவாய் இழப்பு) ஏற்படும் வகையில் சீனி போன்ற பிற அத்தியாவசிய பொருட்களின் விலை அரசாங்கத்தின் ஊழல் கொள்கைகளால் உயர்ந்துள்ளது.

2003 ஆம் ஆண்டின் நுகர்வோர் விவகார அதிகாரச் சட்டம் எண் 9 இன் படி, அதிகபட்ச விலைகளை பரிந்துரைத்தும் பொருட்களை சேகரித்து களஞ்சியப்படுத்தலைத் தடுக்கவும் சட்டரீதியான அதிகாரங்கள் உள்ளன என்பதையும் நாங்கள் கவனிக்கிறோம்.

இதனால், ஏதேனும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் தடைபட்டால், இதற்கு அரசின் திறமையின்மை மற்றும் தவறான நிர்வாகமே காரணமாகுவதோடு, இது பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரநிலை பிரகடனம் தேவைப்படும் ஒரு தொந்தரவு காரணமாக அல்ல என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

அவசரநிலை என்று அழைக்கப்படுவது வீணாகவும், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை தொடர்ச்சியாகவும் தவறாகவும் கட்டுப்படுத்துவதன் மூலம் சர்வாதிகாரத்தை தொடர வேண்டும் என்ற ஆழ்மன நோக்கத்துடன் உள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

அறிவிக்கப்பட்டதாக கூறப்பட்ட அவசர கால நிலையை உடனடியாக இரத்து செய்து (குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியுமான மற்றும் தொற்றுநோய்களை திறம்பட கையாள முடியுமான தர உத்தரவாதமிக்க) தொற்றுநோய்களைக் கையாள்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுப்பதோடு, இதற்கிடையில், சம்பந்தப்பட்ட துறையில் நிபுணர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலைப் பெற்று, தொற்றுநோய் சூழ்நிலையை கையாளத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையை நிறுவ இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின்படி செயல்படுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 02.09.2021 வியாழக்கிழமை - ஆவணி 17**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்:திருவாதிரை** | **வியதீபாதம்** | **கரணம்: பத்திரை** |
| பிற்பகல் 2.57 வரை | காலை 10.09 - 03.09.2021 | காலை 6.22 வரை |
| **புனர்பூசம்** | காலை 10.10 வரை | **பவம்** |
| பி.ப. 2.57 - 03.9.2021 | **திதி: அமர பட்ச ஏகாதசி** | காலை 6.22 - இரவு 7.08 |
| பிற்பகல் 4.42 வரை | காலை 6.22 - | **பாலவம்** |
| **யோகம்: சித்தி** | 03.09.2021 | இரவு 7.08 - 03.09.2021 |
| காலை 10.09 வரை | காலை 7.44 வரை | காலை 7.44 வரை |

**சுப நேரங்கள்**
பிற்பகல் 12.10 - 1.41
மாலை 4.42 - 6.13

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 1.43 - 3.15

**குளிகை காலம்**
காலை 9.09 - 10.41

**எமகண்ட காலம்**
காலை 6.06 - 7.38

**துர் முகூர்த்தம்**
காலை 10.08 - 10.57
மாலை 3.02 - 3.50

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேடம்**: வேலைத்தளங்களில் உயர் பதவியில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வணிக பயணங்கள் மற்றும் வியாபார ஒப்பந்தங்கள் உருவாகலாம். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்**: பணப் பிரச்சினை, தடைப்பட்ட பணிகளின் துவக்கம் ஏற்படலாம். வழக்குகளில் தீர்வு கிடைக்கப் பெறலாம். காதலில் பிரச்சினைகள் நீங்கலாம்.

**மிதுனம்**: பிள்ளைகளின் விடயங்களில் மகிழ்ச்சி உண்டாகும். பண வரவுகள் கிடைக்கலாம். வணிகம் மற்றும் பணிகளில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்**: உடல் அயர்வும், வேலை திறமைக்கு எதிர்நிலையும் உண்டாகலாம். தேவையான முடிவுகளில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை தரும்.

**சிம்மம்**: திருமணத் தடைகள் நீங்கத் துவங்கும். வணிகத்தில் புதிய பங்குதாரர் இணையலாம். பணிகளில் உழைப்புக்கு சரியான நன்மை உண்டாகலாம்.

**கன்னி**: பதவி உயர்வு கிடைக்கப் பெறலாம். பண வர்த்தகங்களில் சாதுர்யம் தேவைப்படலாம். புதிய நிதி ஒதுக்கீடுகளில் கவனம் தேவைப்படலாம்.

**துலாம்**: மாணவர்களின் கல்வி மேம்படும். இல்லத்தின் சூழலில் திருப்தி கிடைக்கலாம். சமூகத்தின் உயர்நிலை உள்ளோரின் நட்பு கிடைக்கப் பெறலாம்.

**விருச்சிகம்**: வாழ்க்கைத்துணையுடன் சகிப்புத்தன்மை பிரச்சினைகளை குறைக்கும். பணிகளில் தேவையற்ற கருத்துகள் உண்டாகலாம். இறை தியானம் நன்மை தரும்.
சந்திராஷ்டமம்: அனுஷம் நட்சத்திரத்திற்கு. காலை 8.25 வரை, கேட்டை நட்சத்திரத்திற்கு காலை 8.25 - 03.09.2021 காலை 10.20 வரை

**தனுசு**: சிலரின் மீதுள்ள நம்பிக்கைகளில் கவனம் தேவைப்படலாம். பெண்களுக்கு திருமண சுப அறிகுறி கிடைக்கப் பெறலாம். பணிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்**: பணிகளில் நிர்வாக அதிகாரம் உடைய பதவி கிடைக்கப் பெறலாம். வீட்டுச் செலவுகளில் கவலைகள் ஏற்படலாம்.

**கும்பம்**: பங்குச்சந்தை இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். பணிகளில் உற்சாகம் தேவைப்படும். வணிக வருவாய் அதிகரிக்கும்.

**மீனம்**: காணி/வீடு பிரச்சினைகளில் நிதானம் தேவைப்படலாம். இறைதியானத்தால் எதிர்மறை எண்ணங்களை குறைத்துக் கொள்ளலாம்.

# இலங்கை - சீன நாடாளுமன்றங்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடல்

## 1.5 பில்லியன் டொலர் பரிமாற்றம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அமைச்சர் பெசில் கோரிக்கை

## சீனாவுக்கு வருமாறு இலங்கைத் தூதுக்குழுவுக்கு அழைப்பு



இலங்கையில் பொருளாதார சவாலை போன்று கொரோனா தொற்று நிலைமையினால் ஏற்பட்டுள்ள சவாலையும் வெற்றிக்கொள்ள சீன அரசாங்கம் முழுப் பலமாக இருக்குமென சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) லீ சன்ஷு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்தார்.

இருநாட்டு நாடாளுமன்றங்களுக் கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது இராஜதந்திர மட்டத்திலான கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் (சீன சபாநாயகர்) லீ சன்ஷு, தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் உபதலைவர் (பிரதி சபாநாயகர்) வூ வெஹ்வா, சீன நிதி அமைச்சர் லியூ குன் உட்பட அந்நாட்டின் பிரபல அமைச்சர்கள் குழு வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்துகொண்ட இந்தக் கூட்டம் கொரோனா தொற்றுநோய் சூழல் ஏற்பட்ட பின்னர் சீன நாடாளுமன்றம் நடத்திய முதலாவது இராஜதந்திர மட்டத்திலான கூட்டம் என்பது விசேடமாகும்.

எமது நாடாளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்தி சபாநாயகருக்கு மேலதிகமாக பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, பெசில் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க மற்றும் பேராசிரியர் ரொஹான் குணரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்பொழுது நிலவும் கொரோனா நிலைமையின் மத்தியில் ஏற்பட்டுள்ள பொருளாதார சவால்களை வெற்றிக்கொள்வதற்கு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பை சபாநாயகர் இதன்போது கோரியிருந்ததுடன், இது தொடர்பில் சீன ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய முழு ஒத்துழைப்பை வழங்குவதாக சீன சபாநாயகர் உறுதியளித்தார்.

விசேடமாக தற்பொழுது நிலவும் நிலைமையை வெற்றிக்கொள்ள சீன அரசாங்கம் வழங்கிவரும் சகல ஒத்துழைப்புகளுக்கும் விசேடமாகத் தனது நன்றியைத் தெரிவித்த சபாநாயகர், சீனா 3 மில்லியன் தடுப்பூசிகளை எமது நாட்டுக்கு நன்கொடையாக வழங்கியிருப்பதாகவும், அதற்கமைய இதுவரை 18 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

07 வருடங்களுக்கு முன்னர் சீன ஜனாதிபதியின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டம் இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாக அமைந்துள்ளது என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார். கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த சர்வதேச முதலீடுகளின் மூலம் இலங்கை எதிர்காலத்தில் உலகப் பொருளாதாரத்தின் கேந்திர நிலையமாக மாறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட சபாநாயகர், இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார். இந்தத் திட்டங்களுக்காக சீன முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறு சீன அரசாங்கத்திடம் தான் கோரிக்கை விடுப்பதாகவும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார். அந்த முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் ஏனைய உலக நாடுகளுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

இரு நாட்டு நாடாளுமன்றங்களுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், சீன சபாநாயகர் உள்ளிட்ட குழுவினரை இந்நாட்டுக்கு வருமாறும் சபாநாயகர் அழைப்பு விடுத்தார். சபாநாயகரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சீன சபாநாயகர், கொவிட் சூழல் தணிந்ததும் இலங்கைக்கு விஜயம் செய்வதாகத் தெரிவித்தார். அத்துடன், கொரோனா நிலைமை தணிந்ததும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் சீன சபாநாயகர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த நிதி அமைச்சல் பெசில் ராஜபக்ஷ,

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், உயர் நீதிமன்ற கட்டடத்தொகுதி, அதிவேக நெடுஞ்சாலைகள், ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், கொழும்பு துறைமுக நகரம் உள்ளிட்ட திட்டங்கள் சீன அரசாங்கத்தின் தலையீட்டினாலேயே இந்நாட்டுக்குக் கிடைத்துள்ளது.

அத்துடன், தற்பொழுது நிலவும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள இருநாட்டு மத்திய வங்கிகளுக்கும் இடையில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதிப் பரிமாற்றத்துக்கான ஒப்பந்தம் சில தொழில்நுட்பக் காரணங்களினால் நடைமுறைப்படுத்த முடியாதுள்ள பின்னணியில், இது தொடர்பில் தயவு செய்து கவனம் செலுத்தவேண்டும்.

இலங்கை - சீன சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் ஆடைகள், தேயிலை மற்றும் மாணிக்கக் கல் போன்ற கைத்தொழில்கள் சீன சந்தையில் நுழைவதற்கான வசதிகளை மேலும் விஸ்தரித்துக் கொடுக்க வேண்டும்.

சீன அபிவிருத்தி வங்கியின் பிராந்திய தலைமையகத்தை கொழும்பு துறைமுக நகரப் பகுதியில் அமைப்பதற்கான சகல வசதிகளையும் வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது. அத்துடன், இந்நாட்டின் முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் சீனாவின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த சீன சபாநாயகர் லீ சன்ஷு,

கொழும்பு துறைமுக நகரத் திட்டம் உள்ளிட்ட ஏனைய முதலீடுகளுக்கு சீனா முதலீட்டு வசதிகளை வழங்கும். சீனாவின் நெருங்கிய நட்புநாடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு முடிந்தளவு ஒத்துழைப்பு வழங்கப்படும். இந்தக் கலந்துரையாடலை மேலும் விரிவான முறையில் எதிர்காலத்துக்கு முன்கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம். நிலவும் கொரோனா நிலைமை தணிந்ததும் இரு நாட்டுத் தூதுக் குழுக்களின் விஜயங்களினூடாக முதலீட்டு ஒத்துழைப்பை மேலும் உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டுசெல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழுவின் பொதுச் செயலாளர் யங் சென்வூ, சீன தேசிய மக்கள் காங்கிரஸின் சட்டக் குழுவின் தலைவரும், இலங்கை சீன நட்புறவு சங்கத்தின் தலைவருமான லீ ஃபெ, தேசிய மக்கள் காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவின் தலைவர் சாங் ஜெசி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# திருமலையில் 147 சிறுவர்கள், 148 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா தொற்று உறுதி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் 147 சிறுவர்களும் 148 கர்ப்பிணித் தாய்மார்களும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட நாளாந்த உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் ஏழு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 235 பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 131 ஆண்களும், 104 பெண்களும் அடங்குகின்றனர். ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரைக்கும் 4ஆயிரத்து 631 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 99 பேர் மரணித்துள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

இதுவரைக்கும் 9ஆயிரத்து 815 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளதாகவும் ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரை 147 சிறுவர்களும், 65 வயதுக்கு மேற்பட்ட 375 பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 148 கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை மாவட்டத்தில் 248 மரணம் சம்பவித்துள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,40,302 | 54,901 | 3,76,216 | 4,221 | 9,185 |

# மஸ்கெலியாவில் 3 வர்த்தக நிலையங்களை சேர்ந்தவர்களுக்கு கொரோனா தொற்று

## ஊரடங்கு விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன

(மஸ்கெலியா, கினிகத்தேனை)

மஸ்கெலியா நகரத்தில் மூன்று வர்த்தக நிலையங்களை சேர்ந்தவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொது சுகாதார அதிகாரி நரேந்திர குமார் தெரிவித்தார்.

தற்போது குறித்த வர்த்தக நிலையங்களில் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களோடு தொடர்புகளை பேணியவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் தொற்று உறுதியானவர்களை சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதோடு மேலும் இவர்களில் ஒருவர் தனியார் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு மஸ்கெலியா நகரில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி யஸரத்ன பண்டார தெரிவித்தார். மஸ்கெலியா பிரதேசத்தில் தற்போது அதிகரித்து வரும் கொவிட் தொற்றை அடுத்து தற்போது அங்கு பொலிஸாரினால் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையிலே நேற்று முன்தினம் விதிகளை மீறி செயற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்ததோடு விதிமுறைகளை மீறி செயற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் பொலிஸாரால் மூடப்பட்டன. மேலும் எதிர்வரும் காலங்களில் விதிகளை மீறி செயற்படும் வர்த்தக நிறுவன ஊழியர்கள் கைது செய்யப்படுவர். அத்தோடு வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்படுவதன் நிமித்தமே மக்கள் நகருக்கு வருகின்றனர் என்பதை வர்த்தக உரிமையாளர்கள் உணர்ந்து நடந்துக்கொள்ள வேண்டுமென தெரிவித்ததோடு அவ்வாறு எதிர்காலத்தில் மக்கள் வருவார்களானால் அவர்களும் கைது செய்யப்படுவர் என்ற அறிவுறுத்தலை பின்பற்றி தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மதித்து நடக்குமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் மேலும் 79பேருக்கு தொற்று

புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 79 பேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, புத்தளம் பிரதேசத்தில் 20 பேருக்கும் கற்பிட்டி பிரதேசத்தில் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. சிலாபம் பிரதேசத்தில் 26 பேருக்கும், மாதம்பே பிரதேசத்தில் ஒருவருக்கும், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் 08 பேருக்கும் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, வென்னப்புவ, மாரவில மற்றும் தங்கொட்டுவ ஆகிய பிரதேசங்களில் கொரோனா நோயாளர்கள் 23 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை வரையில் 09 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்த கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், இரணவில வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்றுவந்த வெல்லம் பிட்டியவைச் சேர்ந்த ஒருவர் என் 09 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# கல்முனை வடக்கில் 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கில் நேற்று 40 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 14 பேருக்கு தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பெரியநீலாவணையில் 26 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 11 பேருக்கும், கல்முனையில் 14 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 03 பேருக்கும் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சுகாதாரப் பிரிவு மேலும் குறிப்பிடுகையில்,

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு செயற்பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கல்முனை வடக்கு சுகாதாரப் பிராந்தியத்திற்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் மூன்றாவது அலையில் இதுவரை 250 இற்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு



பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது. 40 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 14 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கல்முனை வடக்கில் கொரோனா தொற்றைக்கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கி வைப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின்போது பாதிக்கப்பட்ட அங்கவீனர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு நேற்று கொழும்பு கொட்டாஞ்சேனை தபாலகத்தில் வழங்கப்பட்டது.

மேற்படிக் கொடுப்பனவைப் பெற முதியவர்களும், அங்கவீனர்களுமாக சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வருகைதந்து நீண்ட நேரமாக வரிசையில் காத்திருந்தனர்.



பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாக பதுக்குதல், அதிக விலை அறவிடுவதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத்துக்கு உட்படுத்துதல் மற்றும் சந்தை முறைகேடுகளை தவிர்ப்பதற்காக ஜனாதிபதியால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்நாயகமாக மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மேற்குறித்த பிரகடனத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

நாடுமுழுவதிலும் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளமை தேவையற்றதொரு நடவடிக்கையாகும் எனவும் அதன்கீழ் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும் பேராபத்து உள்ளதென்றும் கூட்டமைப்பு ஆட்சேபித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளதாவது,

“பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியை நடைமுறைக்கு கொண்டுவந்ததன் மூலம் திங்கட்கிழமை நள்ளிரவிலிருந்து நாடு முழுவதும் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி இருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. இது ஒரு தேவையற்ற நடவடிக்கை.

நாடுமுழுவதிலும் அடக்குமுறைக்கு இது வழிப்படுத்தக்கூடும். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்திருந்தால் அதோடு சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கையாளத்தான் இந்தச் சட்டத்தின்கீழான அவசரகால நிலையைப் பாவிக்க முடியும். சுகாதார அவசரகால நிலைமையைக் கையாளும் சட்டம் அல்ல இது.

அதனால்தான் பொதுமக்களின் பொதுச் சுகாதார அவசரகால நிலைமைகளைக் கையாள்வதற்கான ஓர் அவசரகால சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக சொல்லிவந்தோம்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/ thaarticle@yahoo.com
2021, செப்டெம்பர் 02ஆம் திகதி, வியாழக்கிழமை

# சவாலுக்குட்படுத்தப்படும் நாட்டின் ஜனநாயகம்

நாடாளுமன்றம் ஒரு வருடத்திற்கு மேல் செயற்பாட்டில் இருந்தும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் அதற்கான ஒரு தனிநபர் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நானே பிரேரித்திருந்தேன். அதை எடுத்து நிறைவேற்றுவதாக அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

ஆனால், இப்போது அவசரகாலச் சட்டத்தின்கீழ் பொதுசன பாதுகாப்பு விதிகளை நடைமுறைப்படுத்தி ஜனாதிபதி பிரகடனம் செய்திருக்கின்றார். நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது என்ற தோரணையில் இப்பொழுது இதனைச் செய்திருக்கிறார்கள்.

இதன் ஆபத்து என்னவென்றால் இதைத் தொடர்ந்து முற்றுமுழுதாக ஜனாதிபதியின் ஆட்சியே நடக்கும். ஜனாதிபதி தாம் விரும்பிய சட்டங்களை, அவசரகால விதிமுறைகளை வகுக்க முடியும்.

சட்டமாக்கும் அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்குச் சென்றடையும். அத்தியாவசிய உணவுப் பொருட்களை சமூகத்திற்கு விநியோகிப்பதை உறுதிப்படுத்துவது என்ற ஏற்பாட்டில் இந்த அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டாலும், அத்தகைய விநியோகங்களில் இப்போது நெருக்கடி நிலை ஏதும் இல்லாதபோதும், அதன்பேரில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

அந்த அத்தியாவசிய சேவை விடயங்களையும் தாண்டி இந்த அவசரகாலச் சட்டம் மக்கள் மீது அடக்குமுறையாகப் பாயலாம் என்பதால் இதனை நாங்கள் வலுவாக கண்டிக்கிறோம்.”

– இவ்வாறு சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடமேறியவுடன் அவசர அவசரமாக ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மீண்டும் வசப்படுத்திக் கொண்டது. அந்த அதிகாரங்கள் காரணமாகவே திணைக்களங்கள், நிறுவனங்கள், ஆணைக்குழுக்களை நிர்வகிக்க இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஜனாதிபதி மேலும் அதிகாரங்களைப் பயன்படுத்த முயற்சிக்கின்றமையானது ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குவதாகவே அமைந்துள்ளது.

ராஜபக்ஷாக்களின் அதிகாரப் பயன்பாடு குறித்து சர்வதேசத்தின் மத்தியில் ஏற்கனவே பல விமர்சனங்கள் உள்ளன. அவ்வாறான விமர்சனங்களுக்கு மேலும் வலுவூட்டும் விதமாகவே ஜனாதிபதியின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

ஒரு நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியாவிட்டால், அந்தப் பலம் ஆட்சியாளர்களிடையே இல்லாவிட்டால் அரச இயந்திரத்தின் இயலாமையைத்தானே அது சுட்டிக்காட்டுகிறது? அவ்வாறாயின் அதற்கான வழிமுறைகளைப் பின்பற்றாமல் அதிகாரத்தை மேலும் பலப்படுத்துவதன் நோக்கம் என்ன?

மக்கள் இன்னும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கைவைத்திருக்கிறார்கள். கொரோனா என்ற ஒன்றைக் காரணங்காட்டி ஜனநாயகம் சவாலுக்குட்படுத்தப்படுமானால்அதன் பிரதிபலனை நாம் ஒவ்வொரு வரும் அனுபவிக்க நேரிடும்.

ஆதலால் அந்த நம்பிக்கைக்கு பாத்திரமான வகையில் ஆட்சி நடத்தவேண்டிய பொறுப்பு இந்த நாட்டின் முதல்குடிமகனுக்கு உண்டென்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்.








# ஆப்கானை விட்டு அமெரிக்கா வெளியேறியதால் தலிபான்கள் கொண்டாட்டம்

- ★ கடந்த 20 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் 1.74 இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்
- ★ 20 ஆண்டுகளில் அமெரிக்கா செலவிட்டது 417 இலட்சம் கோடி ரூபா
- ★ ஆப்கானில் 2,461 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர்
- ★ அமெரிக்க இராணுவ ஒப்பந்ததாரர்களில் 3,846 பேர் கொல்லப்பட்டுள்ளனர்
- ★ ஆப்கானிஸ்தான் இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளைச் சேர்ந்த 66 ஆயிரம் பேர் பலியாயினர்
- ★ ஆப்கான் மக்களில் 47 ஆயிரத்து 245 பேர் பரிதாபமாக இறந்தனர்

அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனைத்தேடி ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்த அமெரிக்கா, இருபது வருடங்களின் பின்னர் அங்கிருந்து வெளியேறியது. அமெரிக்காவின் கடைசி இராணுவ வீரர் வெளியேறியதும், தலிபான்கள் துப்பாக்கியால் சுட்டு தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினர். இருபது வருட உழைப்பு வெறும் பத்து நாட்களில் தவிடு பொடியாகியது.

காபூல் விமானநிலையத்தை விட்டு அமெரிக்கா வெளியேறியதும் தலிபான்கள் காபூல் விமானநிலையத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

காபூல் விமானநிலையத்திலிருந்து கடைசி சி -17 விமானம் காலை 6.56இற்கு வெளியேறியது. ஆப்கானிஸ்தானிலிருந்து விலகுவதை அமெரிக்கா நிறைவுசெய்துள்ளது, அமெரிக்காவின் மிக நீண்ட போர் முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்க இராணுவ வரலாற்றில் ஓர் அத்தியாயம் மூடப்பட்டுவிட்டது. மிகப்பெரிய தோல்விகள், நிறைவேறாத வாக்குறுதிகள் கடைசி நேரத்தில் 180இற்கும் மேற்பட்ட ஆப்கானியர்களும், 13 அமெரிக்க இராணுவத்தினரும் உயிர்களை இழந்த வெறித்தனமான இறுதி வெளியேற்றம்.

ஆப்கானிலிருந்து புறப்பட்ட அமெரிக்காவின் கடைசி விமானத்தில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கிறிஸ்டோபர் டொனாஹே, ஆப்கானுக்கான பொறுப்புத் தூதர் ராஸ் வில்சன் ஆகியோர் கடைசி நபர்களாக ஏறினர்.

கடந்த 15 நாட்களாக நடந்துவந்த மீட்பு நடவடிக்கைகளில் 1.20 இலட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கர், வெளிநாட்டவர், ஆப்கானிஸ்தானியர்களை மீட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது. அதேபோல் நட்பு நாடுகளும், தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களை மீட்டுள்ளன.


ஆப்கானிஸ்தானுக்கு விடுதலை கிடைத்துள்ளது. விமானநிலையம் நம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. அனைவருக்கும் பாதுகாப்பு, அமைதி உறுதி செய்யப்படும் என தலிபான் மூத்த தலைவர் ஹக்மத்துல்லா வாசிக் கூறியுள்ளார். அந்நிய படையெடுப்பு, ஆக்கிரமிப்பிலிருந்து நாடு விடுதலை பெற்றுள்ளது. இது உலக நாடுகளுக்கு ஒரு பாடம் என தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் கூறியுள்ளார்.

அமெரிக்கப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டு தலிபான் கட்டுப்பாட்டுக்குள் விமானநிலையம் வந்துள்ளது. ஆனாலும், நாட்டைவிட்டு செல்வதற்காக நேற்றும் பலர் விமானநிலையம் அருகே காத்திருந்தனர். அமெரிக்கப் படை விமான நிலையத்தைவிட்டு வெளியேறிய பின்னர் தலிபான்களின் முக்கிய தலைவர்கள் அங்கு சென்று பார்வையிட்டனர்.

ஆப்கானிஸ்தானை விட்டு தப்பிக்க முயன்றவர்கள் விட்டுச்சென்ற பைகள், கிழிந்த துணிகள் என விமானநிலையமே குப்பை காடாக காட்சியளிக்கிறது. தவிர, தப்பிச்செல்வதற்காக விமானநிலையத்துக்கு வந்தவர்களின் கார்களும், ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தண்ணீர்ப் போத்தல்கள், உணவுப் பொட்டலங்கள் ஆகியவற்றுடன் அமெரிக்கர்களுக்கு உதவிய நாய்களும் கைவிடப்பட்டுள்ளன.

அமெரிக்கப் படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறும் முன்னர் தங்களின் தளவாடங்களை முழுமையாக எடுத்துச்செல்ல போதுமான நேரம் கிட்டவில்லை. இருப்பினும் தங்கள் நாட்டு இராணுவத் தளவாடங்கள் தலிபான்கள் கைக்கு செல்வதை அவர்கள் தவிர்த்துள்ளனர்.

சினூக் ஹெலிகொப்டர்கள், ஹம்வீக்கள், ஏவுகணை எதிர்ப்பு அமைப்பு போன்றவற்றை நிரந்தரமாக செயலிழக்கச் செய்துவிட்டுதான் அமெரிக்கப் படையினர் வெளியேறியிருக்கின்றனர். அமெரிக்கப் படையினர் வெளியேறிய பின்னர் காபூல் விமானநிலையத்தில் சினூக் ஹெலிகொப்டர்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதிக்குச் செல்லும் தலிபான்கள் அவற்றை பார்வையிடும் வீடியோவை பத்திரிகையாளர் ஒருவர் ட்விட்டரில் பகிர்ந்துள்ளார்.







இதனிடையே இராணுவத் தளவாடங்களை செயலிழக்கச் செய்தமை குறித்து பேசியிருக்கும் அமெரிக்க ஜெனரல் கென்னத் மெக்கன்சி, “காபூல் விமானநிலையத்தில் இருக்கும் 73 இராணுவ விமானங்களை அமெரிக்கப் படையினர் செயலிழக்கச் செய்துவிட்டனர். இனி அவற்றை நிரந்தரமாக பயன்படுத்த முடியாது. அவை ஒருபோதும் பறக்காது. அவற்றை யாராலும் பறக்கவைக்கவும் முடியாது.

இதேபோல் 27 ஹம்வீ வாகனங்களும், 74 கவச வாகனங்களும் நிரந்தரமாக பயன்படுத்த முடியாத வகையில் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன” என தெரிவித்தார்.கவச வாகனம் ஒன்று மட்டுமே ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடையது.

மேலும், இந்த தளவாடங்களை வெடிக்க வைத்து செயலிழக்க வைப்பதை அமெரிக்கப் படையினர் தவிர்த்துவிட்டனர். அப்படிச் செய்திருந்தால் விமானநிலையத்தையே பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால், பயணிகள் விமானங்களை அங்கு இயங்கவைக்கும் முயற்சியாக இராஜதந்திர வகையில் அமெரிக்கப் படையினர் செயற்பட்டிருப்பதாக கென்னத் மெக்கன்சி குறிப்பிட்டார்.

இதனிடையே காபூல் விமான நிலையத்தில் நிறுவியிருந்த சி -ரம்ஸ் எனப்படும் ரொக்கெட் எதிர்ப்பு அமைப்பையும் அமெரிக்கப் படையினர் செயலிழக்க வைத்து எதிர்காலத்தில் பயன்படுத்த முடியாத வகையில் செய்திருக்கின்றனர். அமெரிக்கப் படையினர் வெளியேறுவதற்கு கடைசி நிமிடம் முன்புவரை இந்த ரொக்கெட் எதிர்ப்பு அமைப்பு செயற்பாட்டில் இருந்துள்ளது. இந்த ஏவுகணை எதிர்ப்பு அமைப்புதான் ஐ.எஸ். அமைப்பினரின் தாக்குதல்களை சில மணி நேரங்கள் முன்புவரை முறியடிப்பதில் முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்க இராணுவ தளவாடங்கள் செயற்படாத நிலையில் இருப்பதை அறிந்த தலிபான்கள் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானநிலையத்தைப் பராமரிக்க தேவையான உபகரணங்களும், தொழில்நுட்ப நிபுணர்களும் தலிபான்களிடம் இல்லை. கட்டார் அல்லது துருக்கியின் உதவியுடன் மீளமைக்கப்படும் என தலிபான்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்கப் படைகள் கைவிட்டுச் சென்ற விமானங்களுக்குள் சென்ற தலிபான்கள், விமானிகளின் இருக்கையில் அமர்ந்திருக்கும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கப் படைகள் முழுமையாக விலக்கிக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், 200 அமெரிக்கர்கள் இன்னும் ஆப்கானிஸ்தானில் இருப்பதாக கூறப்படுகிறது. விமானநிலையத்துக்கு வர முடியாமல் 200 அமெரிக்கர்களும், ஏராளமான ஆப்கானிஸ்தானியர்களும் சிக்கியுள்ளனர். காபூல் விமானநிலையம் திறக்கப்பட்டதும் அவர்களை மீட்டு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளின்கென் கூறியுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை மீட்டு வந்துள்ளோம். இன்னும் சில நாட்கள் அங்கு இருந்திருந்தால் அனைவரையும் மீட்டிருப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே அமெரிக்கர்களை சாலை மார்க்கமாக மீட்பது குறித்து ஆப்கானின் அண்டைநாடுகளுடனும், தலிபான்களுடனும் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதரகம் கட்டாரின் தலைநகர் டோஹாவிலிருந்து செயற்படும் எனவும் தெரிய வருகிறது.

அமெரிக்காவின் தோல்விகள் ஏராளம். இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்கும் ஆயுதங்களை தயார் செய்வதற்கும் அமெரிக்க பில்லியன் டொலர் செலவழித்தபோதிலும், கிளர்ச்சியாளர்களை தடுத்துநிறுத்தக்கூடிய ஆப்கான் இராணுவத்தை உருவாக்க முடியவில்லை.

தலிபான்கள் அரசாங்கத்தை முழுமையாகக் கைப்பற்றியதால் தொடர்ச்சியான பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். ஆப்கானிஸ்தான் வெளிநாட்டு இருப்புகளில் வைத்திருக்கும் பில்லியன் கணக்கான டொலர்களில் பெரும்பான்மையானவை இப்போது அமெரிக்காவின் பிடியிலுள்ளன. நாடு முழுவதும் உள்ள அரச ஊழியர்கள் பல மாதங்களாக தங்கள் சம்பளத்தை பெறவில்லை என்று கூறுகின்றனர்.

மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளன. ஆயிரக்கணக்கானோர் மோசமான நிலையில் வாழ்கின்றனர். ஒரு பெரிய வறட்சி நாட்டின் உணவுப் பொருட்களை குறைத்து, அதன் இறக்குமதிகளை மேலும் முக்கியமாக்கி, மக்கள் பசியால் வாடும் அபாயத்தை அதிகரித்துள்ளது.

இவற்றை எல்லாம் தலிபான்கள் எப்படிச் சமாளிக்கப்போகிறார்கள். எந்த நாட்டிலிருந்து எப்படியான உதவியை எதிர்பார்க்கிறார்களென்பதை அவர்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

ரமணி

# தென்மராட்சியில் 83 பேருக்கு தொற்றுறுதி

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 83 பேர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச்சென்ற 12 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 28 பேர், கைதடி முதியோர் இல்லத்தில் முதியவர்கள் 41 பேர் உட்பட 43 பேர் என மொத்தமாக 83 தொற்றாளர்கள் தென்மராட்சியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# நீர்கொழும்பில் கடற்படை அதிகாரிகளால் விசேட சுற்றிவளைப்பு

## சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த 2 ஆயிரம் கிலோ உலர் மஞ்சளுடன் இருவர் கைது







நீர்கொழும்பு, களப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த 2 ஆயிரத்து 23 கிலோவுக்கு அதிகமான உலர் மஞ்சள் தொகையுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்களிடமிருந்து 02 டிங்கி படகுகளும் மீட்கப்பட்டுள்ளன. அதற்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பின்போது சந்தேகத்துக்குரிய டிங்கி படகொன்று பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. குறித்த டிங்கி படகிலிருந்து 29 உரைகளில் பொதியிடப்பட்டிருந்த ஆயிரத்து 50 கிலோகிராம் உலர் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், நேற்று முன்தினம் அதிகாலை நீர்கொழும்பு களப்புக்கு வந்துகொண்டிருந்த மேலுமொரு சந்தேகத்துக்கிடமான டிங்கி படகொன்று பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. வியாபாரிகளினால் கடலில் கைவிடப்பட்டு சென்ற குறித்த டிங்கி படகிலிருந்து 26 பொதிகளில் அடைக்கப்பட்ட 973 கிலோ 650 கிராம் உலர் மஞ்சள் தொகை மீட்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2 ஆயிரத்து 23 கிலோ கிராமுக்கும் அதிக தொகையுடைய உலர் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. நீர்கொழும்பு, பிட்டிபன பிரதேசத்தைச் சேர்ந்த 36 மற்றும் 37 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட மஞ்சள் தொகை, டிங்கி படகுகள் என்பவற்றுடன் சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தீர்வை வரியின்றி கொண்டுவரப்பட்ட ஒருதொகை சிகரெட்டுகள், மதுபானத்துடன் நபரொருவர் கைது

## மாணிக்கக்கல்லும் மீட்பு



கல்கிஸை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது தீர்வை வரியின்றி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் மற்றும் வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை தலைமையக அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது தீர்வை வரியின்றி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 30 ஆயிரம் சிகரெட்டுகள், 95 வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் மற்றும் ஒரு வைட் சபாயர் வகையைச் சேர்ந்த மாணிக்கக்கல் என்பன இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கல்கிஸை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு 03ஐச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பில் கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி ஆலய சந்தானகோபாலர் உற்சவம் நேற்றுக் காலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# வல்வெட்டித்துறை நகர சபைக்கான புதிய தலைவர் தெரிவு இன்று

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு இன்று காலை 10 மணிக்கு நகர சபை மண்டபத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்படும் என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார். இந்நிலையில், அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிய தலைவரை தெரிவுசெய்வதற்கான அமர்வு இன்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. சுயேச்சைக் குழு 4 ஆசனங்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன தலா 2 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

இங்கு அறுதிப் பெரும்பான்மை பெற கூட்டமைப்புக்கு 2 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுவதுடன், சுயேச்சைக் குழு இம்முறை தமது சார்பில் ஒருவரை முன்மொழியலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இந்த மூன்று தரப்புகளும் இணைந்தாலும் கூட, 7 ஆசனங்களைத்தான் தக்கவைத்துக்கொள்ள முடியும். இந்நிலையில், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவில் ஈ.பி.டி.பி. முக்கிய பங்கை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ கட்சியின் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரிந்து தனிக் கட்சி ஆரம்பித்ததால் அவரது சார்பு உறுப்பினர்களின் நிலைப்பாடு தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

# யாழ். ஸ்ரான்லி வீதியை புனரமைக்க துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஸ்ரான்லி வீதி புனரமைப்பு தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் கூடி ஆராயப்பட்டுள்ளது. இந்த புனரமைப்புப் பணிகள் தொடர்பில் ஆராய்வதற்கு கள விஜயமொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஸ்ரான்லி வீதி விஸ்தரிப்பு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து நேரடியாக ஸ்ரான்லி வீதிக்கு கள விஜயம் செய்யப்பட்டு உடைத்தகற்றப்படவேண்டிய வர்த்தக நிலையங்களின் பகுதிகள் தொடர்பில் நேரடியாக பார்வையிடப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர், மாநகர பிரதி ஆணையாளர், மாநகர பொறியியலாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர், மின்சார சபை மின் அத்தியட்சகர், ரெலிகொம் பொறியியலாளர் மற்றும் குறித்த வீதி விஸ்தரிப்பு பணியில் ஈடுபடவுள்ள ஒப்பந்தக்கார நிறுவனமான ஹன்கோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர், பொறியியலாளர் உள்ளிட்ட ஊழியர்கள், யாழ். வர்த்தக சங்கத்தின் தலைவர் என பலர் கலந்துகொண்டனர்.

குறித்த வீதி விஸ்தரிப்புக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக கடை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஸ்ரான்லி வீதியானது வீதி நடுவிலிருந்து இரு பக்கமும் 8அடி விஸ்தரிக்கப்படவுள்ளது.



இவ்வீதியில் வாகன தரிப்பிடம், வாய்க்காலுடன் கூடிய நடைபாதை, பெற்றோல் நிலைய சந்தியில் சுற்றுவட்டம் என்பன அமைக்கப்படவுள்ளன.

குறித்த வீதி விஸ்தரிப்பு பணிகளை விரைவாக ஆரம்பித்து நிறைவுசெய்து தருமாறு மாநகர முதல்வரால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீதி விஸ்தரிப்பு பணிகள் விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், இதனால் ஏற்படும் அசௌகரியங்களை பொறுத்துக்கொள்ளுமாறும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் வர்த்தகர்களையும் பொதுமக்களையும் யாழ். மாநகர முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# யாழில் மேலும் ஐவர் கொரோனாவுக்கு பலி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் ஐவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற சங்கானையைச் சேர்ந்த 74 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட வரணியில் 98 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்துள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த கட்டுவனையைச் சேர்ந்த 81 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 100 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில், சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று கண்டறிப்பட்டுள்ளது.

அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்ந்த 47 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில், மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## குற்றம் தவிர்

தொகுப்பு: நா.தினுஷா

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

**எகொட உயன**

எகொட உயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோதரை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**சபுகஸ்கந்த**

சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயாகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சபுகஸ்கந்த பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 12 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை முச்சக்கரவண்டியில் எடுத்து சென்றுகொண்டிருந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**மோதரை**

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 04ஆம் கட்டை புகையிரத குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் மோதரை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொட்டலங்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட இன்னுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 03 கிராம் 100 மில்லிகிராம் போதைப் பொருளுடன் மேலுமொரு நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 15ஐச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**தலங்கம**

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாஹேன பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 04 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபர்கள் கைது

**மஹபாகே**

மஹபாகே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொட்டுபல வீதியில் நேற்று முன்தினம் மஹபாகே பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 33 லீற்றர் 750 மில்லிலீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் 1, 295 லீற்றருடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மஹபாகே பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**அளுத்கம**

அளுத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலுவாமோதர பிரதேசத்தில் களுத்துறை குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 135 லீற்றர் மதுபானம் மற்றும் 5 ஆயிரத்து 136 லீற்றர் கோடா என்பவற்றுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டு களுத்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### புதையல் தோண்ட முயற்சித்த 12பேர் கைது

**மிஹிந்தலை**

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராஜகிரி லேனில் அமைந்துள்ள தொல்பொருள் ஆய்வு பிரதேசத்தில் ஒருசிலர் புதையல் தோண்ட முயற்சிப்பதாக மிஹிந்தலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது புதையல் தோண்டிய 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

களுத்துறை, அநுராதபுரம், ஏப்பாவல, பதுரலிய, வஸ்கடுவ மற்றும் தெம்முவத ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21 - 52 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கட்டட நிர்மாணப் பொருட்கள் நிர்ணய விலையைவிட அதிகரித்து விற்கப்பட்டால் மீறுவோர்மீது சட்ட நடவடிக்கை

## கல்முனை மாநகர சபை எச்சரிக்கை



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் கட்டட நிர்மாணப் பொருட்கள் அனைத்தும், நிர்ணய விலையிலேயே விற்கப்படவேண்டும் எனவும் மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகர சபை அறிவித்துள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநகர சபையின் பொறியியல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான பரிசோதகர்களுடனான விசேட கலந்துரையாடலின்போது இவ்விடயம் குறித்து கூடிய அவதானம் செலுத்தப்பட்டு, மக்களுக்கு நிர்ணய விலையில் கட்டட நிர்மாணப்பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் எடுக்கப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

இவ்விடயம் குறித்து மாநகர முதல்வர் தெரிவிக்கையில்,

கொரோனா பெருந்தொற்று அசாதாரண சூழ்நிலை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கட்டட நிர்மாணப் பொருட்களுக்கு என்றுமில்லாதவாறு திடீரென கடுமையான விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆராய்ந்தபோது, இந்த விலையேற்ற மானது அரசாங்கத்தின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறித்த பொருட்களை விநியோகிக்கும் தரகர்களே தன்னிச்சையாக விலையேற்றம் செய்து, கொள்ளை இலாபம் ஈட்டுகின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது. இது ஒரு மாபியாவாகும்.

இந்நிலையில், அம்பாறை மாவட்ட கச்சேரியின் கட்டட நிர்மாணப் பொருட்களுக்கான விலை நிர்ணயக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற நிர்ணய விலைக்கே கல்முனை மாநகர சபை எல்லையினுள் செங்கல், முண்டுக்கல், முக்கால் இஞ்சிக்கல், கட்டு மண், பூச்சு மண், அத்திவாரம் நிரப்பும் மண், கிரவல் போன்றவை விற்பனை செய்யப்படவேண்டுமென கல்முனை மாநகர சபையால் கண்டிப்பான உத்தரவு விடுக்கப்படுகிறது.

அவ்வாறே சீமெந்து மற்றும் கம்பி போன்றவை உரிய கம்பனிகளால் குறிக்கப்பட்ட நிர்ணய விலைகளுக்கே விற்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

அதேவேளை, இப்பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் கட்டாயம் பற்றுச்சீட்டு வழங்கவேண்டும். நுகர்வோர் கட்டாயம் இப்பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டே குறித்த பொருட்களை பொறுப்பேற்றுச் செல்ல வேண்டும். பற்றுச்சீட்டு இல்லாமல் வாகனங்களில் கொண்டுசெல்லப்படும் பொருட்கள், மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்படும்.

மேலும், கட்டட நிர்மாணப் பொருட்களை விநியோகிக்கும் தரகர்களும் வாகனங்களும் கல்முனை மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்டு, அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், உரிய வாகனங்கள் கல்முனை மாநகர சபை எல்லையினுள் உட்பிரவேசிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாநகர சபையின் உரிய கள உத்தியோகத்தர்களின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பதிவுசெய்யப்படாத வாகனங்களில் கொண்டு வரப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு, சம்பந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே பதிவுசெய்யப்படாத தரகர்கள் யாராவது கல்முனை மாநகர சபை எல்லையினுள் வியாபாரத்தில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநகர சபையின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களினால் இவ்வாகனங்களின் கொள்ளளவு அளவீடு செய்யப்பட்டு, குறித்த வாகனங்களில் காட்சிப்படுத்தப்படும். இக்கொள்ளளவுக்கேற்பவே கல், மணல், கிரவல் போன்றவற்றின் விலைகளும் நிர்ணயிக்கப்படும்.

கட்டிட நிர்மாணப் பொருட்கள் எதுவாயினும் அவற்றை பதுக்கிவைப்பதும் நிர்ணய விலைக்கு மேலதிகமாக விற்பனைசெய்வதும் கண்டறியப்பட்டால், நுகர்வோர் அதிகாரசபையும் மாநகர சபையும் இணைந்து பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் சம்பந்தப்பட்டோரைக் கைதுசெய்து, சட்ட நடவடிக்கைக்குட்படுத்தி, அதிகபட்ச தண்டப்பணம் விதிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு சின்ன ஊறணியில் நகைக்கடை உடைத்துக் கொள்ளை

## ஐந்தரை பவுண் நகை, 85 ஆயிரம் ரூபா பணம் திருட்டு






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சின்ன ஊறணியில் பிரதான வீதியிலுள்ள பலசரக்குக் கடையுடன் இணைந்த நகைக்கடை ஒன்றின் பின்பகுதி கதவை உடைத்து அங்கிருந்த ஐந்தரை பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் 85 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கொள்ளையிட்ட சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடையின் ஒரு பகுதியில் பலசரக்கு வியாபாரமும் ஒருபகுதியில் நகை ஈடுபிடிக்கும் வியாபாரமும் இடம்பெற்றுவந்த நிலையில், ஊரடங்குச் சட்டம் காரணமாக மூடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலையில் கடையின் முதலாளி கடைக்கு சென்ற நிலையில், கடையின் பின்பகுதி கதவு பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. அங்கு பொருத்தப்பட்ட சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளதுடன், குறித்த கொள்ளையர்கள் முகத்தை மறைத்தபடி சூட்சகமாக கொள்ளையிட்டு சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு பொலிஸ் தடயவியல் பிரிவு மற்றும் மோப்பநாய் சகிதம் பொலிஸார் சென்று தீவிர விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தினால் குப்பைகளை உண்ண வரும் யானைகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி





(பாறுக் ஷிஹான்)

அட்டாளைச்சேனை அஷ்ரப் நகரில் குப்பைகளை உண்ண வரும் யானைகள் குறைவடைந்து வருகின்றன. கடந்த காலங்களில் இப்பகுதிகளில் குப்பைகளை உண்ண வரும் யானைகள் அருகிலுள்ள குடியிருப்பு மனைகளை தாக்கியதுடன், மக்களுக்கும் அச்சுறுத்தலாக இருந்து வந்தது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு தரப்பினரும் இணைந்து குறித்த யானைகளை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். தற்போது அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குள் உள்ளடங்குகின்ற அஷ்ரப் நகர் திண்மக்கழிவு கொட்டும் இடத்தில் இரு வேறு நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்த தொடங்கியுள்ளன.

இதில் ஒரு நிறுவனம் இயற்கைப் பசளை தயாரிப்பதற்காக அங்கு பொருத்தப்பட்டுள்ள பாரிய இயந்திரத்தின் மூலம் உரத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மற்றைய தனியார் நிறுவனமொன்று இயற்கை வாயு தயாரிப்பதை நோக்கமாகக் கொண்டு ஏனைய திண்மக்கழிவுகளை கையாள்கின்றது. இதனடிப்படையில் தற்போது நாவிதன்வெளி, சம்மாந்துறை, கல்முனை, காரைதீவு, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு மற்றும் நிந்தவூர் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவுகளை தரம் பிரித்து பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதனால் அதிலுள்ள இயற்கை திண்மக்கழிவுகள் பெரும்பாலும் உரம் தயாரிப்பதற்காக உடனடியாகவே அஷ்ரப் நகர் திண்மக் கழிவு கொட்டும் இடத்திலுள்ள பாரிய இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள இடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகின்றது.

இதனால் அஷ்ரப் நகர் பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை உண்பதற்காக தினந்தோறும் 80இற்கும் மேற்பட்ட யானைகள் வருகை தந்திருந்த நிலையில், தற்போது6 முதல் 8 யானைகளே தினமும் வருகை தருவதாக அங்கு பணியாற்றுகின்ற பணியாளர் தெரிவித்தார். இது தவிர, அருகிலுள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கின்ற யானைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தினமும் மேற்குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்ற பிரதேசங்களிலிருந்து இப்பகுதிக்கு மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் குப்பைகள் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்ற நிலையில், மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் வந்து உண்டுவிட்டு செல்கின்றன.

தற்போது இந்த யானைகளை கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, மேலும் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான பல பொறிமுறைத் திட்டங்கள் பள்ளக்காட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்பாறை பிராந்தியத்தில் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் அநேகமானவை மேற்குறித்த இடத்திற்கே கொட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# சுபோதினி அறிக்கையை நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்கும்வரை போராட்டம் தொடரும்

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்

(நூருள் ஹுதா உமர்)

ஆசிரியர், அதிபர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக்கொண்டும் அரசு இழுத்தடிப்புச் செய்வதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சுபோதினி அறிக்கையை நடைமுறைப் படுத்துவதாக அறிவிக்கும் வரை எமது போராட்டம் ஓய்வடையாதென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் அமைச்சரவை இணைக்குழு வெளியிட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா, செயலாளர் எம்.கே.எம்.நியார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிபர், ஆசிரியர் சேவையை வரைவிடப்பட்ட சேவையாக அமைச்சரவை அறிவித்துள்ளமைக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். எனினும், கூட்டிணைந்த தொழிற்சங்கங்கள் கடந்த இரு மாதங்களாக மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கான ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென்றே நாம் எதிர்பார்த்தோம்.

5ஆயிரம் ரூபா இடைக்காலக் கொடுப்பனவோ அமைச்சரவை தீர்மானித்த சம்பளத் தொகையை நான்கு கட்டங்களாக வழங்குவதோ எமது போராட்டங்களுக்குத் தீர்வாகாது. யானைப் பசிக்கு சோளப் பொரிபோல் கண்துடைப்பு வேலையொன்றையே அமைச்சரவை உப குழு அறிவித்துள்ளது. இதனை தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாம் வன்மையாக நிராகரிக்கின்றோம்.

2018ஆம் ஆண்டு கல்வியமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட சம்பள அறிக்கையில் உள்ள விடயங்களையே அமைச்சரவை உப குழுவும் அறிவித்துள்ளது. இவ்வாறான அறிவிப்புக்கு சம்பள முரண்பாடு தீர்க்கும் முன்னெடுப்பு என்ற மாயை தேவையில்லை. சுபோதினி சம்பள முரண்பாட்டு அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களே தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் எனத் தெரிந்திருந்தும் அதன் நியாயப்பாடுகளை விளங்கியும் கண்மூடித்தனமான அறிவிப்பொன்றை அமைச்சரவை உப குழு விடுத்திருப்பதை ஏமாற்று வேலையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மாணவர் சமூகத்திற்கான ஆசிரியர் தேவைப்பாடுகள் உள்ள தீர்க்கமான காலகட்டத்திலிருந்தும் மாணவர் சமூகத்தின் மீது கவலையற்ற நிலையில் தொடர்ந்தும் அமைச்சரவை உப குழு தீர்மானத்திற்கு வந்திருப்பது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அமைச்சரவை உப குழுவின் அறிக்கையை பிரபல்யப்படுத்தி எமது போராட்டங்கள் நிறைவடைந்துவிட்டதான மாயை ஒன்றை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றனர். இவ்வாறான விடயங்கள் மீது ஆசிரியர் சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும். எமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டங்கள் தொடரும். கூட்டிணைந்த தொழிற்சங்கங்களின் உத்தியோகபூர்வ அறிவிப்புவரும்வரை தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அனைவரினதும் கடப்பாடாகும்.

தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆசிரியர் சமூகத்தின் விடிவுக்காக இரவு, பகல் பாராது செயற்படுவதை ஆசிரியர்களாகிய நாம் உணரவேண்டும். இது தனிப்பட்ட பிரச்சினையல்ல. கூட்டிணைந்த முன்னெடுப்பு. இவையெல்லாம் நமக்காகவே. இவ்விடயத்தில் சகல அதிபர், ஆசிரியர்களும் இதயசுத்தியுடன் புரிந்துகொண்டு தற்போது வழங்கிவரும் ஆதரவைத் தொடர்ந்தும் வழங்க முன்வர வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களுவாஞ்சிக்குடியில் 8 ஆயிரம் பேருக்கு செலுத்தப்பட்டுள்ள இரண்டாம் கட்ட தடுப்பூசி





(பாண்டிருப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற 10 ஆயிரம் தடுப்பூசிகளில் தற்போது 8 ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

களுவாஞ்சிக்குடி மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் 30 வயதுக்கும் மேற்பட்டோருக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.இராஜேந்திரன் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகின்றன.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்திலுள்ள துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஓந்தாட்சி மடம், களுவாஞ்சிக்குடி, எருவில், மகிழூர், குருமண்வெளி, பட்டிருப்பு, களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிப்பாளையம், குருக்கள்மடம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள் மூலம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. களுதாவளை கிராமத்தில் நேற்று 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் இங்குள்ள பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள் மூலம் நடைபெற்றன.

இங்கு தடுப்பூசியினை செலுத்துவதற்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்திருந்தனர். களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் 30 வயதுக்கும் மேற்பட்ட அனைவரும் தவறாது தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை அதிபராக எம்.எஸ்.எம்.பைசால் நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

ஒன்பது வருடங்களாக சாய்ந்தமருது கமு/கமு/ரியாலுல் ஜன்னா வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றிய எம்.ஐ.சம்சுதீன், அண்மையில் நடைபெற்ற அதிபர் இடமாற்றத்திற்கு அமைவாக கமு/கமு/லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தின் அதிபராக இடமாற்றம் பெற்றிருந்ததுடன், நேற்று முன்தினம் மாலை தனது கடமை யினை பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசாலிடமிருந்து உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதேபோன்று கமு/கமு/அல்-ஹிலால் வித்தியாலய அதிபராக கடமையாற்றி கமு/கமு/ லீடர் அஷ்ரப் வித்தியாலயத் தின் அதிபராக இடமாற்றம் பெற்றிருந்த பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தனது அதிபர் தரம் ஒன்றுக்கு பொருத்தமான பாடசாலையான கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலைக்கு அதிபராக இடமாற்றலாகி தன்னுடைய அதிபர் பொறுப்புகளை ஓய்வுபெற்ற அப்பாடசாலை அதிபர் எஸ்.எம்.அலிக்கானிடமிருந்து நேற்று முன்தினம் மாலை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வுகளில் கொவிட்-19 நிலைமையினை கருத்திற்கொண்டு சில ஆசிரியர்களும், பாடசாலையின் அபிவிருத்திச் சபையின் ஒருசில உறுப்பினர்களும், முக்கிய பிரமுகர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 39 பேர் உயிரிழப்பு; 24 மணிநேரத்தில் 237 பேருக்கு கொவிட் தொற்று

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 7 நாட்களில் கொரோனாவினால் 39 பேர் உயிரிழந்துள்ளதையடுத்து, இதுவரை உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 222ஆக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 237 பேருக்கு கொரோனா தொற்றுறுதி கண்டறியப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் வவுணதீவு பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் உட்பட இருவர் கடந்த 24 மணிநேரத்தில் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 75, களுவாஞ்சிக்குடியில் 78, வெல்லாவெளியில் 41, பட்டிப்பளை, வவுணதீவு, ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா 10 பேர் வீதம் 30 பேரும், காத்தான்குடியில் 8, கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்2,




வாழைச்சேனை, கிரான், வாகரை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் 3 பேர் உட்பட 237 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டது.

அதேவேளை 20 வயது தொடக்கம் 40 வயது வரை 9 பேரும், 40 வயது தொடக்கம் 60 வயது வரை 66 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டோர் 147 பேரும் உட்பட 222 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை 30 வயதுக்கு மேற்பட்ட முதலாவது தடுப்பூசி 93 வீதமானவர்களான 2 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கும், இரண்டாவது தடுப்பூசி 39 வீதமான ஒரு இலட்சத்து 13 ஆயிரம் பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

# தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இணைந்த ஓரினத் தம்பதியர்



மெரீட் எட் பெர்ஸ்ட் சைட் என்ற நிகழ்ச்சி உலகின் பல்வேறு நாடுகளில் மிகப் பிரபலமான தொலைக்காட்சி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. பிரித்தானியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்துகொண்ட நிகழ்வு இடம்பெற்றது.

மிகப் பிரபலமான நிகழ்ச்சியில் முதன்முறையாக இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து பலரும் வியந்து கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

மெரீட் எட் பெர்ஸ்ட் சைட் என்ற நிகழ்ச்சியானது, முதல் சந்திப்பின்போதே திருமணத்தை நிச்சயிக்கும் வகையில் இடம்பெறுவதாகும். அதாவது, தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு அனைவரும் அழைத்துவரப்பட்டதன் பின்னர் பல்வேறு போட்டிகள் இடம்பெறும். அதில் தங்களுக்குரிய துணையை அவர்கள் தெரிவுசெய்யலாம். அவ்வாறு ஒருவர் தெரிவுசெய்யும் பட்சத்தில் மற்றையவர் மனதிலும் அதே நபர் இடம்பெற்றிருக்க வேண்டும்.

இந்நிலையில், பிரித்தானியாவில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் ஆண்கள் இருவர் தங்கள் திருமணத்தை நிச்சயித்துக்கொண்டனர். மேட் (வயது 39), டெனியல் (வயது 27) ஆகிய இருவருமே இவ்வாறு திருமணம் செய்துகொண்டுள்ளனர்.

இவர்கள் வெளிப்படையாக தமது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டமை வரவேற்கத்தக்கது என பிரித்தானிய தொலைக்காட்சி ரசிகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# ஆப்கானில் மனித உடலுடன் பறந்த அமெரிக்க விமானம்



ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக நிலைநிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படையினர் அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர். இறுதியாக, காபூல் விமானநிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்கப் படையினர் அந்த விமானநிலையத்திலிருந்து சிறப்பு விமானம் மூலம் வெளியேறினர்.

இதனைத் தொடர்ந்து காபூல் விமானநிலையத்திற்குள் புகுந்த தலிபான்கள் அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் மற்றும் அமெரிக்காவால் விட்டுச்செல்லப்பட்ட விமானங்களையும் ஆய்வுசெய்தனர்.

இந்நிலையில், அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான அதிநவீன பிளாக்ஹாக் ஹெலிகொப்டரை தலிபான்கள் இயக்கும் காணொளி சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. கந்தகார் மாகாணத்தில் எடுக்கப்பட்ட அந்தக் காணொளியில் அமெரிக்க பிளாக்ஹாக் ஹெலிகொப்டர் தலிபான்களால் இயக்கப்படுவதும் ஹெலிகொப்டரில் மனித உடல் கட்டி தொங்கவிடப்பட்டு இருப்பது போன்றும் காட்சிகள் பதிவாகியுள்ளன. ஹெலிகொப்டரில் கட்டி தொங்கவிடப்பட்டது மனித உடலா அல்லது பொம்மையா என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

காபூலிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் அமெரிக்கப் படை அங்குள்ள அமெரிக்காவின் 73 போர் விமானங்கள், நவீன ஏவுகணை தடுப்பு உபகரணங்கள் உள்ளிட்டவற்றை செயலற்றதாக்கிவிட்டன. இந்த விமானங்களால் மீண்டும் பறக்க முடியாது. தலிபான்களால் அவற்றை இயக்கவும் முடியாது என அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி கென்னத் மெக்கன்சி தெரிவித்திருந்தார்.

ஆனால், தற்போது அமெரிக்காவுக்கு சொந்தமான அதிநவீன பிளாக்ஹாக் ஹெலிகொப்டரை தலிபான்கள் இயக்குவது போன்ற வீடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நடக்கும் இலை!



இலையொன்று நடந்துசெல்வது போன்ற காட்சி சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்படுகிறது. இலையா? இராட்சத பூச்சியினமா? என அசந்துபோகும் அளவுக்கு வெளியாகியுள்ள காணொளி ஒரே நாளில் ஒரு மில்லியன் பார்வையாளர்களை எட்டியுள்ளது.

இலை எப்படி நடக்கும் என யோசிக்கும்போது, அது இலை அல்ல, பூச்சி என அறிந்துகொண்டனர். ஆம், பார்ப்பதற்கு அச்சு அசலாக இலை போலவே அந்தப் பூச்சி இருக்கும். சாதாரணமாக பார்க்கும்போது, உங்களால், அது ஒரு பூச்சி என்பதை உடனடியாக கிரகித்துக்கொள்ள முடியாது. அந்தளவுக்கு தத்ரூபமாக அந்த பூச்சி இருக்கும்.

இந்த இலைப் பூச்சியை ((Leaf Insect) 'நடக்கும் இலை' என்றும் அழைக்கிறார்கள். பெயருக்கு ஏற்றாற்போல இப்பூச்சியால் நடக்க மட்டுமே முடியும், பறக்க முடியாது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் இலைப் பூச்சி, இலைகளைத் தின்று வளரும்போது பச்சை நிறத்துக்கு மாறிவிடும். சுமார் 2.3 அங்குலமே இருக்கும் இந்த இலைப் பூச்சிகள், இலைகளுடன் சேர்ந்திருந்தால் சுலபத்தில் கண்டுபிடிக்கவே முடியாது. இந்தியா மற்றும் பிஜி தீவுகளில் இலைப் பூச்சிகள் அதிகம் வாழ்கின்றன. பழுப்பு மற்றும் மெரூன் நிறத்திலும் இந்தப் பூச்சிகள் இருக்கின்றன.

# தலிபான்களுடன் இந்தியா பேச்சு

ஆப்கானிஸ்தானை கைப்பற்றியுள்ள தலிபான்களுடன் தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக இந்திய மத்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டாரின் தலைநகர் டோஹாவில், அந்நாட்டுக்கான இந்தியத் தூதர் தீபக் மிட்டலும், தலிபான் அரசியல் பிரிவு தலைவர் ஸ்டானெக்ஸாய்யும் பேச்சுவார்த்தை நடத்தியதாக வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, பயங்கரவாத செயல்களுக்கு ஆப்கானிஸ்தான் மண் பயன்படுத்தப்படும் என இந்தியா கவலை தெரிவித்தது. இந்தியர்களின் பாதுகாப்பு மற்றும் வெளியேற்றம் குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக செய்திகள்

# பாம்பின் விஷத்திலிருந்து கொரோனாவுக்கு தீர்வு

## பிரேசில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

ஒருவகை பாம்பின் விஷத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள மூலக்கூறு, குரங்கின் செல்களில் வளரும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதாக பிரேஸில் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் மருந்தை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் உலக விஞ்ஞானிகள் ஈடுபட்டுவருகின்றனர். பல்வேறு தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், ஒருவகை பாம்பின் விஷத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள மூலக்கூறு, குரங்கின் செல்களில் வளரும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதாக பிரேஸில் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜரரகசு பிட் வைப்பர் என்ற ஒருவகை பாம்பின் விஷத்திலிருந்து எடுக்கப்படும் மூலக்கூறு, குரங்கின் உடலில் வைரஸ் பரவும் திறனை 75 சதவிகிதம் குறைப்பதாக மூலக்கூறு, என்ற விஞ்ஞான பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இதுகுறித்து சாவோ பவுலோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரபேல் கைடோ கூறுகையில், "வைரஸ் வெளியிடும் முக்கிய புரதத்தை பாம்பின் விஷம் கட்டுப்படுத்துவதை ஆய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியும்" - என்றார்.

மூலக்கூறு என்பது (பெப்டைட்)அமினோ அமிலத்தின் குறுகிய சங்கிலியாகும். இதன்மூலம், கொரோனா வைரஸின் (Enzyme) நொதியுடன் இணைப்பை ஏற்படுத்த முடியும். வைரஸை உற்பத்தி செய்வதில் இதுவே முக்கிய பங்காற்றுகிறது. சாவோ பவுலோவில் உயிரியல் சேகரிப்பு ஆய்வகத்தை நடத்திவரும் ஊர்வன நிபுணர் கியூசெப் பூர்டோ இதுகுறித்து கூறுகையில், "பாம்பை பிடித்து வளர்ப்பதன்மூலம் பக்டீரியா எதிர்ப்பு குணங்களை உள்ளடக்கிய பெப்டைட்டை ஆய்வகத்தில் செயற்கையாக உற்பத்திசெய்ய முடியும்.



# தமிழகம் முழுவதும் நேற்று பாடசாலைகள் திறப்பு

## அச்சப்படத் தேவையில்லையென அமைச்சர் அறிவுறுத்தல்



தமிழ்நாட்டில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நேற்று பாடசாலைகள் திறக்கப்பட்ட நிலையில், பெற்றோர், மாணவர்கள் பயப்படத் தேவையில்லை என்று கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் பாடசாலைக்கு வரவேண்டும் என்று மாணவர்களை கட்டாயப்படுத்தக் கூடாதென்று உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் வகுப்புகள் நடைபெறவுள்ளன. வாரத்தில் ஆறு நாட்களும் வகுப்புகளை நடத்தவும், ஒவ்வொரு வகுப்பறையிலும் 20 மாணவர்கள் மட்டும் தனிமனித இடைவெளியை பின்பற்றி அமர வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும், மாணவர்களுக்கு நாள்தோறும் உடல்வெப்ப நிலையை பரிசோதிக்க வேண்டும், பாடசாலைகளில் போதிய இடவசதி இல்லாத பட்சத்தில் 9 மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சுழற்சி முறையிலும், 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தினமும் வகுப்புகள் நடத்தலாம் என்றும் பாடசாலை கல்வித்துறை தெரிவித்துள்ளது. ஆசிரியர்கள், மற்றும் ஊழியர்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும், முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை வளாகங்களில் தனிமனித இடைவெளியை கடைப்பிடிப்பது உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால், மாணவர்கள் தயக்கமின்றி பாடசாலைக்கு வரலாம் என்று ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். பாடசாலைகள் திறப்பிற்கான இறுதிக்கட்ட பணிகளை அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் ஆட்சியர்கள் ஆய்வுசெய்ததுடன், கொரோனா தடுப்பு வழிகாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்தனர்.

# இந்தியாவில் 30 இலட்சம் வாட்ஸ்அப் கணக்குகள் முடக்கம்

இந்தியாவில் கடந்த ஜூன் 16 முதல் ஜூலை 31 வரை 30 இலட்சம் வாட்ஸ்அப் கணக்குகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின்படி, 50 இலட்சத்துக்கும் அதிகமான பயனர்களைக்கொண்ட மிகப்பெரிய டிஜிட்டல் தளங்கள் தமக்கு வந்த புகார்கள், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாதந்தோறும் அறிக்கை வெளியிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாட்ஸ்-அப் நிறுவனம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவில் கடந்த ஜூன் 16 முதல் ஜூலை 31 வரை 30,27,000 வாட்ஸ்-அப் கணக்குகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் 594 புகார்கள் வந்ததாகவும், 74 கணக்குகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ''இது தங்களின் இரண்டாவது மாதாந்த அறிக்கை'' என்று வாட்ஸ்-அப் நிறுவன செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வத்தின் மனைவி கொரோனா தொற்றினால் உயிரிழப்பு

முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜய லட்சுமி (வயது 63) கொரோனா தொற்றினால் உயிரிழந்தார்.

அவரது பூதவுடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி உடல்நலக்குறைவு காரணமாக கடந்த இரு வாரங்களாக சென்னை பெருங்குடியிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைபெற்று வந்த நிலையில், நேற்று காலை மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவ மனையிலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ள விஜயலட்சுமியின் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்ற அஞ்சலி செலுத்தினார். பின்னர் ஓ.பன்னீர்செல்வத்தின் கையை பிடித்து முதல்வர் ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.



மருத்துவனையில் விஜயலட்சு மிக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். முதல்வருடன் அமைச்சர்கள் துரைமுருகன், மா.சுப்பிரமணியன், தங்கம் தென்னரசு உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# இலங்கை – தென்னாபிரிக்கா ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்




## எட்டு வருடங்களின் பின்னர் தொடரை கைப்பற்றுமா இலங்கை அணி?



ஏ. அகீல் சிஹாப்

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்கும், டெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலகக் கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒருநாள் சர்வதேச தொடர் இன்று மாலை 3 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

டெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்கொண்ட தலா 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கைக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்தவகையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரு தரப்பு கிரிக்கெட் தொடரின் முதல் தொடரான 3 போட்டிகள்கொண்ட ஒரு நாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகிறது.




### இதுவரையில் மோதிய ஒருநாள் போட்டிகள்

இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் இதுவரையில் மோதிய ஒருநாள் சர்வதேச போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம். கடந்த 1992ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக் கிடையில் ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில் தான் இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகள் முதல் முறையாக ஒருநாள் போட்டியில் நேருக்கு நேர் மோதின. இந்தப் போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

கடந்த 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில்தான் இரு அணிகளும் இறுதியாக மோதின. இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றியை பதிவுசெய்தது.

அந்தவகையில் இலங்கை – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இதுவரையில் நடைபெற்றுள்ள 77 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தென்னாபிரிக்க அணி 44 போட்டிகளில் வெற்றிபெற்று முன்னிலை வகிக்கிறது. இலங்கை அணி 31 போட்டிகளில் மாத்திரம் வெற்றிபெற்றுள்ள நிலையில், ஒரு போட்டி சமநிலையிலும், இன்னுமொரு போட்டி வெற்றி தோல்வியின்றியும் நிறைவடைந்துள்ளன.

### இறுதி ஐந்து போட்டிகள்

இறுதியாக நடைபெற்ற 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தென்னாபிரிக்க அணி அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்துகிறது.

### இதுவரையில் நடைபெற்ற இருதரப்பு தொடர்கள்

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்ற இருதரப்பு ஒருநாள் சர்வதேச தொடர்கள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது இதுவரையில் 10 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் தென்னாபிரிக்க அணி 7 தொடர்களை வெற்றிகொண்டு ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கை அணி வெறும் இரண்டே இரண்டு தொடர்களில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது.

மேலும் ஒரு தொடர் - அதாவது, கடந்த 1993ஆம் ஆண்டு முதல் தடவையாக இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையில் நிறைவுக்கு வந்தது. இந்தத் தரவுகளை வைத்து பார்க்கின்றபோது இலங்கை அணி கடந்த 2013ஆம் ஆண்டின் பின்னர் தென்னாபிரிக்க அணியுடன் இருதரப்பு ஒருநாள் சர்வதேச தொடரை கைப்பற்றவில்லை.

எனவே, 8 வருடங்களின் பின்னர் இலங்கை அணி தென்னாபிரிக்க அணியுடன் இருதரப்பு ஒருநாள் தொடரை கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். மேலும் இலங்கை அணி கடந்த 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் வைத்து தென்னாபிரிக்க அணியுடன் பெற்ற ஒருநாள் சர்வதேச வெற்றியின் பின்னர் கடந்த மூன்று வருடங்களாக இலங்கை அணி ஒருநாள் வெற்றியை பதிவுசெய்யவில்லை. எனவே, அதையும் இலங்கை அணி செய்யுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

Match results

| Team 1 | Team 2 | Winner | Margin | Ground | Match Date |
|---|---|---|---|---|---|
| Sri Lanka | South Africa | Sri Lanka | 17 runs | Colombo (RPS) | Jul 23, 2013 |
| Sri Lanka | South Africa | South Africa | 56 runs | Pallekele | Jul 26, 2013 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 8 wickets | Pallekele | Jul 28, 2013 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 128 runs | Colombo (RPS) | Jul 31, 2013 |
| Sri Lanka | South Africa | South Africa | 75 runs | Colombo (RPS) | Jul 6, 2014 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 87 runs | Pallekele | Jul 9, 2014 |
| Sri Lanka | South Africa | South Africa | 82 runs | Hambantota | Jul 12, 2014 |
| South Africa | Sri Lanka | South Africa | 9 wickets | Sydney | Mar 18, 2015 |
| South Africa | Sri Lanka | South Africa | 8 wickets | Port Elizabeth | Jan 28, 2017 |
| South Africa | Sri Lanka | South Africa | 121 runs | Durban | Feb 1, 2017 |
| South Africa | Sri Lanka | South Africa | 7 wickets | Johannesburg | Feb 4, 2017 |
| South Africa | Sri Lanka | South Africa | 40 runs | Cape Town | Feb 7, 2017 |
| South Africa | Sri Lanka | South Africa | 88 runs | Centurion | Feb 10, 2017 |
| South Africa | Sri Lanka | South Africa | 96 runs | The Oval | Jun 3, 2017 |
| Sri Lanka | South Africa | South Africa | 5 wickets | Dambulla | Jul 29, 2018 |
| Sri Lanka | South Africa | South Africa | 4 wickets | Dambulla | Aug 1, 2018 |
| Sri Lanka | South Africa | South Africa | 78 runs | Pallekele | Aug 5, 2018 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 3 runs | Pallekele | Aug 8, 2018 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 178 runs | Colombo (RPS) | Aug 12, 2018 |
| South Africa | Sri Lanka | South Africa | 8 wickets | Johannesburg | Mar 3, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 113 runs | Centurion | Mar 6, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 71 runs | Durban | Mar 10, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 6 wickets | Port Elizabeth | Mar 13, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 41 runs | Cape Town | Mar 16, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 9 wickets | Chester-le-Street | Jun 28, 2019 |

இறுதியாக நடைபெற்ற 25 ஒருநாள் போட்டிகள்

**இலங்கை அணியின் குழாம்**

தசுன் சானக்க (அணித்தலைவர்), தனஞ்ஜய டி சில்வா, குசல் பெரேரா, தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்னாண்டோ, பானுக்க ராஜபக்ஷ, மினோத் பானுக்க, பெத்தும் நிசங்க, சரித் அசலங்க, வனிந்து ஹஸரங்க, ரமேஷ் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம, அகில தனஞ்ஜய, நுவான் பிரதீப், லஹிரு குமார, துஸ்மந்த சமீர, பினுர பெர்னாண்டோ, சமிக்க கருணாரத்ன, லஹிரு மதுசங்க, மஹேஸ் தீக்ஷன, புலின தரங்க

**தென்னாபிரிக்க அணியின் குழாம்**

டெம்பா பவுமா (அணித்தலைவர்), பியுரன் ஹென்ட்ரிக்ஸ், ரீஸா ஹென்ட்ரிக்ஸ், ஹென்ரிச் கிளாசன், ஜெனீமன் மாலன், கேஷவ் மஹராஜ், எய்டன் மார்க்ரம், வியான் முல்டர், அன்ரிச் நோட்ரியா, அண்டில் பெஹ்லுக்வாயோ, ககிசோ ரபாடா, தப்ரிஸ் ஷம்ஷி, ரைஸ் வென் டர் டைஸன், கைல் வெர்ரைன், லிஸார்ட் வில்லியம்ஸ், ஜோர்ஜ் லின்டி, ஜூனியர் டாலா, டுவைன் பிரிடோரியஸ்

**ஒருநாள் போட்டி அட்டவணை (போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன)**

2 செப்டெம்பர் - முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி
4 செப்டெம்பர் - இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டி
7 செப்டெம்பர் - மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டி

# "யார் பந்து வீசினாலும் ஓட்டங்கள் குவிப்பது மட்டும்தான் எங்களது வேலை" – ஜோ ரூட்



இந்திய அணியுடனான நான்காவது டெஸ்ட் போட்டி இன்று லண்டன், த ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், யார் பந்து வீசினாலும் அவர்களின் பந்துவீச்சை சமாளித்து ஓட்டங்கள் குவிப்பது மட்டும்தான் எங்களது வேலை என இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணியானது 5 போட்டிகள்கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் மூன்று போட்டிகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், தொடர் 1-1 என்ற அடிப்படையில் சமநிலை பெற்றுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டி தொடர்பில் இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் கருத்து தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

"விராட் கோஹ்லியை ஆட்டமிழக்கச்செய்யும் வழிமுறையை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அடுத்துவரும் போட்டிகளிலும் இதே முயற்சியில் அவருக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து சீக்கிரம் வீழ்த்த வேண்டும். அப்போதுதான் தொடரை வெல்ல முடியும்.

நான்காவது டெஸ்டில் இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது. அவர் உலகத்தரம் வாய்ந்த வீரர். எங்களுக்கு எதிராக விக்கெட் வீழ்த்தியது மட்டுமன்றி, ஓட்டங்களையும் குவித்துள்ளார். டெஸ்டில் அவரது திறமை என்ன என்பதை நாங்கள் அறிவோம். அதற்கேற்ப நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அஷ்வினால் டெஸ்ட் போட்டிகளில் எவ்வளவு சிறப்பாக விளையாட முடியும் என்பதும் எங்களுக்குத் தெரியும். அவரது பந்துவீச்சை எதிர்கொள்ளவும் நாங்கள் தயாராகவே உள்ளோம். போட்டியின்போது யார் பந்து வீசினாலும் அவர்களின் பந்துவீச்சை சமாளித்து ஓட்டங்கள் குவிப்பது மட்டும்தான் எங்களது வேலை. அதை சரியாகச் செய்வோம் என்ற நம்பிக்கை உள்ளது" - எனத் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 'நான் நலமாக உள்ளேன்' – பீலே



உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே, பிரேஸிலிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிறகுதான் நலமாக இருப்பதாக ட்விட்டரில் தெரிவித்துள்ளார். 80 வயதான பீலே சாவ் பாலோவிலுள்ள அல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

"நண்பர்களே, நான் மயக்கமடையவில்லை. நான் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். தொற்றுநோய் காரணமாக என்னால் முன்பு செய்யமுடியாத எனது வழக்கமான சோதனைக்குச் சென்றேன்"என்று பீலே ட்விட்டரில் கூறினார்.

பீலே மூன்று முறை உலகக் கிண்ணத்தை வென்றவர். 2012இல் இடுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு அரிதாகவே பொது இடங்களுக்குச் செல்கிறார். அவர் தொடர்ச்சியான புரோஸ்டேட் மற்றும் சிறுநீரக பிரச்சினைகளை எதிர்த்துப் போராடினார். பெரும்பாலும் மருத்துவமனையில் சிகிச்சை தேவைப்படுகிறது. கடந்த ஆண்டு, பீலேயின் மகன் எடின்ஹோ தனது தந்தை பலவீனமான உடல்நலம் மற்றும் இயக்கம் குறைந்து வருவதால் 'ஒருவித மனஅழுத்தத்துடன்' போராடி வருவதாக கூறினார்.

# ஒரேயொரு இலங்கை வீராங்கனைக்கு ஏமாற்றம்



டோக்கியோ பராலிம்பிக்கில் மகளிர் ரி-47 பிரிவு 100 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி முதல் சுற்று ஆட்டத்தில் களமிறங்கிய குமுது திஸாநாயக்க இறுதி இடத்தைப் பெற்று அடுத்த சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை இழந்தார்.

டோக்கியோ பராலிம்பிக் கடந்த ஓகஸ்ட் 24ஆம் திகதிமுதல் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரேயொரு பெண் வீராங்கனையாக களமிறங்கிய குமுது திஸாநாயக்க நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ரி-47 பிரிவு 100 மீற்றர் முதல் சுற்று ஓட்டத்தில் களமிறங்கினார்.

குறித்த போட்டியை 13.31 செக்கன்களில் நிறைவுசெய்த குமுது திஸாநாயக்க எட்டாவது இடத்தைப் பெற்று இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை தவறவிட்டார். இந்தப் போட்டியில் வெனிசுலா வீராங்கனை லிஸ்பெலி வெரா போட்டியை 12.14 செக்கன்களில் ஓடிமுடித்து முதலிடத்தை பெற்றார்.

இதேவேளை, நாளை நடைபெறவுள்ள பெண்களுக்கான நீளம் பாய்தலில் குமுது திஸாநாயக்க போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

16வது கோடைக்கால பராலிம்பிக் விளையாட்டு போட்டிகள் 2020
SRI LANKA
ஈடிணையற்ற சாதனைக்கான வலுவூட்டல்
Dialog

# உலகின் கவனத்தை ஈர்த்த இப்ராஹிம் ஹமாடோ



(ரமணி)

இரண்டு கைகளையும் இழந்தபோதிலும் மனதைத் தளரவிடாது வாயால் மேசைப்பந்து மட்டையை கௌவிக்கொண்டு டோக்கியோ பராலிம்பிக்கில் விளையாடிய எகிப்து வீரரான இப்ராஹிம் ஹமாடோ உலகத்தால் வியந்து பார்க்கப்பட்டார். அவர் அனைவரின் மனதிலும் இடம் பிடித்துவிட்டார்.

டோக்கியோ 2020 பராலிம்பிக் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கொரிய குடியரசின் பார்க் ஹாங்குயுக்கு எதிரான போட்டியில் 11-6, 11-4, 11-9 என்ற செட் கணக்கில் தோற்கடிக்கப்பட்டார். இப்ராஹிம் ஹமாடோ தோல்வியடைந்தாலும், அங்கிருந்தவர்கள் அவரை உற்சாகப்படுத்தினார்கள்.

அந்தப் போட்டியைப் பதிவுசெய்த அனைத்து கெமராக்களும் இப்ராஹிம் ஹமடாவை பிரத்தியேகமாக உலகுக்கு தெரியப்படுத்தின. இதன் காரணமாக அவர் இணையத்தில் வைரலாகி, ஃபொக்ஸ் நியூஸ், டெய்லி மெயில் மற்றும் பிஸ்னஸ் இன்சைடர் போன்ற பல உலகளாவிய தளங்களில் இடம்பெற்றார்.

10 வயதானபோது விபத்தில் தனது இரண்டு கைகளையும் இழந்த ஹமாடோ, ஒரு வருடமாக வீட்டை விட்டு வெளியேறவில்லை. ஊரிலுள்ள சிறுவர்களுடன் சேர்ந்து உதைபந்து விளையாடினார். பின்னர் மேசைப்பந்து பக்கம் கவனத்தைத் திருப்பினார். தனது வாயால் மட்டையை கட்டுப்படுத்தி பார்வையாளர்களை திகைக்க வைத்தார்.

2014ஆம் ஆண்டில் சி.என்.என். ஊடகத்திடம் பேசுகையில், விபத்துக்குப் பிறகு விளையாட்டைத் தொடர்ந்து விளையாடுவது எவ்வளவு கடினம் என்பதை ஹமாடோ நினைவு கூர்ந்தார். "நான் மூன்று வருடங்கள் தொடர்ந்து கடினமாக பயிற்சி செய்யவேண்டியிருந்தது. ஆரம்பத்தில் நான் விளையாடுவதைப் பார்த்து மக்கள் ஆச்சரியப்பட்டனர். அவர்கள் என்னை மிகவும் ஊக்குவித்தனர், ஆதரித்தனர். மேலும் எனது விருப்பம், விடாமுயற்சி மற்றும் உறுதியால் அவர்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள்" - என்று அவர் கூறினார்.

ஹமாடோவின் பயணம் 2014இல் தொடங்கியது. அப்போது டுபாயில் ஷேக் முகமது பின் ரஷித் அல்-மக்தூம் விளையாட்டு கண்டுபிடிப்பு விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டார். அந்த ஆண்டின் சிறந்த அரபு விளையாட்டு வீரருக்கான விருது வழங்கப்பட்டது. பின்னர் அவரை 2015 ஆபிரிக்க சம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கம் வெல்லத் தூண்டியது.

2016ஆம் ஆண்டு ஆபிரிக்க சம்பியன்ஷிப்பில் இரண்டாவது தடவையாக தகுதிபெற்ற பிறகு அவர் தனது முதல் பராலிம்பிக்கில் ரியோவை அடைந்தபோது, இறுதி திருப்புமுனை அவருக்கு வந்தது. அவர் ஒற்றையர் பிரிவில் 11ஆவது இடத்தையும், அணிகளின் நிகழ்வில் 9ஆவது இடத்தையும் பெற்றார்.

# இரண்டாம் கணக்காண்டின் ஐந்தொகையில் மூன்றாவது ரூ. 1 டிரில்லியன் இலக்கை அடைந்த கொம்பாங்க்

இலங்கையில் முதற்தடவையாக தனியார் வங்கியொன்று இரண்டாம் கணக்காண்டில் அடைந்த முக்கிய மைல்கல்லான ரூபா 1டிரில்லியன் கடன் புத்தக தொகையை கடந்ததன் மூலம் 2021 ஜூன் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் இலங்கை கொமர்ஷல் வங்கியின் முக்கிய குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவாகியுள்ளது.

இலங்கையின் மிகப்பெரிய தனியார்துறை வங்கி, அதன் துணை நிறுவனங்கள் மற்றும் ஒரு பங்காளியை உள்ளடக்கிய இந்தக் குழுமமானது மொத்த வருமானமாக ரூ. 79.931 பில்லியனைப் பதிவுசெய்துள்ளது. இது 2020ஆம் ஆண்டின் இதே ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது 6.34% வளர்ச்சியையும், 2021ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 11.23% முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

இந்தக் குழுமமானது முதல் காலாண்டின் 2% வட்டி வருமானத்தின் எதிர்மறையான வளர்ச்சியை இரண்டாவது காலாண்டில் 9% முன்னேற்றமாக மாற்றியதன் மூலம் 2021ஆம் ஆண்டின் முதல் பாதியை ரூ. 63.355 பில்லியன் வட்டி வருமானத்துடன் நிறைவுசெய்ததுடன், இது கடந்த ஆண்டின் முதல் காலாண்டை விட 3.2% அதிகரிப்பாகும். ஆறு மாதங்களுக்கான வட்டிச் செலவுகள் 16.65% குறைந்து ரூ. 32.197 பில்லியனாக பதிவாகியதுடன், குழுமமானது மதிப்பீட்டுக் காலத்தில் ரூ. 31.158 பில்லியன் நிகர வட்டி வருமானத்தைப் பதிவுசெய்து, ஆறு மாதங்கள் மற்றும் இரண்டாவது காலாண்டில் முறையே 36.86% மற்றும் 57.06% வளர்ச்சியை அடைந்தது.

கடன் வழங்கும் வளர்ச்சியிலிருந்து செயற்பாட்டு வருமானத்தில் அதிகரிப்பு, நிகர கட்டணம், தரகு வருமானம் மற்றும் பிற வருமானத்தின் சில கூறுகளில் குறிப்பிடத்தக்க ஆதாயங்கள் ஆகியன மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆறு மாதங்களில் குறைபாடு கட்டணங்களில் கணிசமான வளர்ச்சியால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. ஆனால், நாங்கள் ஒட்டுமொத்த முடிவுகளில் மகிழ்ச்சியடைகின்றோம். ஏனெனில், முதல் காலாண்டின் முன்னேற்றத்தை நன்கு பயன்படுத்தியுள்ளதுடன், பல முக்கிய விகிதங்கள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை மேம்படுத்தியுள்ளோம்" என கொமர்ஷல் வங்கியின் தலைவர் நீதியரசர் கே.ஸ்ரீபவன் தெரிவித்தார்.

வங்கியின் CASA விகிதம் 42.72 வீதத்திலிருந்து 45.37 வீதமாகவும், 2020ஆம் ஆண்டின் இறுதியில் 40.79 வீதமாகவும் அதிகரித்துள்ளது என கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். ரெங்கநாதன் இது குறித்து விபரித்தார்.

"உலகளாவிய தொற்றுநோயால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கும்போது மூலதன போதுமான விகிதங்கள், செயற்படாத கடன் விகிதங்கள், வழங்கல் பாதுகாப்பு மற்றும் வட்டி விகிதங்களில் நிலையான முன்னேற்றங்களையும் நாங்கள் தக்கவைத்துள்ளோம். வணிகங்கள் மற்றும் சமூகத்தில் கொவிட்-19இன் தாக்கத்தைக் குறைப்பதற்கும் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும் அரசாங்க முயற்சிகளைச் செயற்படுத்த நாங்கள் முழு ஆதரவை வழங்கினோம். இதில், கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குவது மற்றும் வங்கியின் சொந்த சலுகைக் கடன் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு, 'சௌபாக்யா' கடன் திட்டத்தில் பங்கேற்பதும் அடங்கும். வரவிருக்கும் ஆண்டுகளில் மதிப்புள்ள பாதகமான சூழ்நிலைகளில் நன்கு சமநிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஒரு திட்டம் இப்போது எங்களிடம் உள்ளது என்று நாங்கள் நம்புகிறோம் - என்றார்.

எங்கள் கடன் புத்தகம் 1டிரில்லியன் ரூபாவை தாண்டியமை தொடர்பில் நாங்கள் ஊக்கமடைகின்றோம். இதனால் கொமர்ஷல் வங்கியானது ரூ. 1டிரில்லியனைத் தாண்டிய மூன்று முக்கிய ஐந்தொகை குறிகாட்டிகளைக் கொண்ட இலங்கையின் முதல் தனியார்துறை வங்கியாகும். எங்கள் சொத்துகள் 2016இல் இந்த வரம்பை தாண்டியதுடன், வைப்புத்தொகை 2019இல் அதை அடைந்தது - என ரெங்கநாதன் மேலும் தெரிவித்தார்.

ஆறு மாதங்களுக்கான குழுமத்திற்கான மொத்த செயற்பாட்டு வருமானம் 30.78 வீதத்தால் ரூ. 46.344 பில்லியனாக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் குறைபாட்டு கட்டணங்கள் மற்றும் பிற இழப்புகளுக்கான ஏற்பாடுகள் 47.44% அதிகரித்து ரூ. 13.654 பில்லியனாக இருந்தது.

இதன் விளைவாக, நிகர செயற்பாட்டு வருமானம் 24.88 வீதத்தால் ரூ. 32.690 பில்லியனாக அதிகரித்தது. ஆனால், செயற்பாட்டு செலவுகள் 8.42% அதிகரிப்புடன் ரூ. 14.079 பில்லியனாக கட்டுப்படுத்தப்பட்டது. குழுமமானது ஆறு மாதங்களுக்கான நிதி சேவைகளில் VATஇற்கு முன் ரூ. 18.611 பில்லியன் செயற்பாட்டு இலாபத்தை பதிவுசெய்ததுடன், முந்தைய ஆண்டின் இதே ஆறு மாதங்களை விட 41.09% வலுவான வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. நிதி சேவைகள் மீதான VAT 37.82% ஆக ரூ 2.857 பில்லியனாக அதிகரித்ததுடன், இதன் விளைவாக குழுமமானது 2021 முதல் பாதியில் ரூ. 15.754 பில்லியன் வருமான வரிக்கு முன் இலாபத்தை அடைந்ததுடன், இது 2020 ஆம் ஆண்டின் இதே ஆறு மாதங்களை விட 41.71% முன்னேற்றமாகும்.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலத்திற்கான வருமான வரி ரூ. 3.400 பில்லியனாக கணிப்பிடப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருமான வரியின் அதிகப்படியான முன்னேற்பாடுகளின் புறமாற்றலின் விளைவாக இது 7.33% குறைந்தது.

இதன் விளைவாக கொமர்ஷல் வங்கி குழுமமானது ஆறு மாதங்களுக்கு வரிக்குப் பின்னர் ரூ. 12.354 பில்லியன் இலாபத்துடன் 65.87% வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன், இரண்டாவது காலாண்டில் மாத்திரம் 52.93% வளர்ச்சியை பதிவு செய்தது. தனித்தனியாக எடுத்துக்கொண்டால், கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன், வரிக்கு முன்னரான இலாபமாக ரூ. 15.420 பில்லியனை 47.61% வளர்ச்சியுடன் பதிவுசெய்ததுடன், வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 12.134 பில்லியனை 74.31% முன்னேற்றத்துடனும் பதிவுசெய்திருந்தது.

குழுமத்தின் மொத்த சொத்துகள் 2021 ஜூன் 30 அன்று ஆறு மாதங்களில் ரூ. 172 பில்லியனால் அல்லது 9.77 வீதத்தால், ரூ. 1.935 ட்ரில்லியனாக அதிகரித்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது முந்தைய 12 மாதங்களில் சொத்து வளர்ச்சியானது ரூ. 368 பில்லியன் அல்லது 23.49 வீதமாக இருந்தது.

மொத்த கடன்கள் மற்றும் முற்பணமானது ரூ. 72.164 பில்லியன் அல்லது 7.50 வீதத்தால் ரூ. 1.034 டிரில்லியன் ஆக அதிகரித்ததன் மூலம் ஆறு மாதங்களில் மாத சராசரி வளர்ச்சி ரூ. 12 பில்லியனாக பதிவானது. முந்தைய ஆண்டை விட கடன் புத்தகத்தின் வளர்ச்சி 9.82%.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட 6 மாத காலப்பகுதியில், குழுமத்தின் மொத்த வைப்புகள் ரூ. 118 பில்லியன் அல்லது 9.20% என்ற சிறந்த பெறுபேற்றை பதிவுசெய்ததுடன், இது 2021 ஜூன் 30இல் மாதாந்த சராசரியாக ரூ. 19.7 பில்லியனிலிருந்து ரூ.1.405 டிரில்லியன் அதிகரிப்பாகும். முந்தைய 12 மாதங்களில் வைப்பு வளர்ச்சி ரூ. 250 பில்லியன் அல்லது 21.63% மாத சராசரியாக ரூ. 20.8 பில்லியனாக இருந்தது.

இலங்கையில் முழுவதும் காபன் நடுநிலையான முதலாவது வங்கியான கொமர்ஷல் வங்கி, உலகின் முதல் 1,000 வங்கிகள் என்ற பட்டியலில் இடம்பிடித்த இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கியாகும். அப்பட்டியலில் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் இடம்பிடித்த இலங்கையின் ஒரே வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கி, இலங்கையில் 268 கிளைகளையும் 931 தானியங்கி வங்கி இயந்திரங்களையும் (ஏ.ரி.எம்.) கொண்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது.

வங்கியின் வெளிநாட்டுச் செயற்பாடுகள், 19 கிளைகளைக்கொண்டுள்ள பங்களாதேஷை உள்ளடக்குகின்றன. அதேபோல், மியன்மாரின் நேப்பியுடோவில் நுண் நிதி நிறுவனமொன்றையும், மாலைதீவில் முழுமையான செயற்பாடுகளைக் கொண்ட முதல் வரிசை வங்கியொன்றை பெரும்பான்மைப் பங்குரிமையோடு வங்கி கொண்டுள்ளது.



கொமர்ஷல் வங்கியின் தலைவர் நீதியரசர் கே. ஸ்ரீபவன் (முதலாவது) மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ரெங்கநாதன்

## SLT-Mobitel ஹோம் (நிரந்தர இணைப்பு) வாடிக்கையாளர்களுக்கு Caller Tune சேவையை அறிமுகம் செய்து தொலைத்தொடர்பாடல் வரலாற்றில் SLT-MOBITEL சாதனை படைத்துள்ளது

**பாரம்பரிய ringtone இற்கு பதிலாக பிரத்தியேக தெரிவு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது**

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் மொபைல் சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, புதிய, புத்தாக்கமான சேவைகளை அறிமுகம் செய்வதில் முன்னோடியாகத் திகழ்வதுடன், தேசத்தின் தொடர்பாடல் துறையில் மற்றுமொரு மைல்கல் சாதனையாக முதன்முறையாக SLT-Mobitel ஹோம் (நிரந்தர தொலைபேசி) இணைப்புகளுக்கு Caller Tune சேவையை அறிமுகம் செய்துள்ளது.

டிஜிட்டல் ஊடக கட்டமைப்புகள், மொபைல் அப்ளிகேஷன்கள் மற்றும் இதர பெறுமதி சேர் சேவைகளை மொபைல் வலையமைப்பு வழங்குநர்களுக்கு நிர்வகித்து வழங்கும் மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரான Evoke இன்டர்நஷனல் லிமிடெட் உடன் கைகோர்த்து, SLT-Mobitel தனது SLT-Mobitel ஹோம் (நிரந்தர) இணைப்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட சேவையாக 'Caller Tunes' (CRBT)ஐ அறிமுகம் செய்துள்ளது.

புதிய Caller Tune சேவையினூடாக, Fibre, 4G LTE மற்றும் மெகாலைன் வாடிக்கையாளர்களுக்கு தமது வாடிக்கையாளர்கள் தமக்கு அழைப்பை மேற்கொள்ளும்போது அவர்கள் செவிமடுக்க வேண்டிய பதிவை தெரிவுசெய்யும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக அழைப்பை மேற்கொள்பவரின் அனுபவம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சேவையை செயற்படுத்திக்கொள்வதற்கு SLT-Mobitel ஹோம் (நிரந்தர இணைப்பு) வாடிக்கையாளர்கள் 1259 எனும் இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி, அதில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றி, தமக்கு விருப்பமான பக்கேஜை தெரிவுசெய்ய வேண்டும்.

SLTஇன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியான பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "எமது SLT-Mobitel ஹோம் (நிரந்தர இணைப்பு) வாடிக்கையாளர்களுக்காக Caller Tune சேவையை அறிமுகம் செய்துள்ளமையானது முக்கியத்துவம் வாய்ந்த சாதனையாகும். இந்த பெறுமதி சேர்க்கப்பட்ட சேவையினூடாக, பிரத்தியேகமான மற்றும் புத்தாக்கமான அனுபவம் வழங்கப்படுவதுடன், மகிழ்ச்சியூட்டும் பெறுமதியுடன் மாறுபட்ட தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தும் அனுபவத்தையும் வழங்கும்" என்றார்.

புதிய Caller Tune சேவையுடன் SLT-Mobitel ஹோம் (நிரந்தர இணைப்பு) வாடிக்கையாளர்களுக்கு தமக்கு விருப்பமான பாடல்களை பாடல் தெரிவுகளிலிருந்து மேற்கொள்ள முடியும். இதில் பரந்தளவு ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் ஹிந்தி மொழிப் பாடல்கள் அடங்கியுள்ளன. இதனூடாக அழைப்பை ஏற்படுத்தும்போது, பாரம்பரிய அழைப்பு ஒலிக்குப் பதிலாக பாடல்களை செவிமடுக்கக்கூடியதாக இருக்கும்.

Evoke இன்டர்நஷனல் பிரதம நிறைவேற்று அதிகாரி லஹிரு விக்ரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "SLT-MOBITELஇன் தெரிவுக்குரிய பங்காளராக நாம் திகழ்வதையிட்டு பெருமைகொள்கின்றோம். இலங்கையின் முன்னணி பெறுமதிசேர் தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், SLT-MOBITEL உடன் இணைந்து பணியாற்றுவதற்கு SLT-MOBITEL எதிர்பார்ப்பதுடன், அதனூடாக புத்தாக்கமான பல உள்ளம்சங்களை SLT-MOBITELஇன் தனிநபர் வாடிக்கையாளர்களுக்கும், நிறுவனசார் வாடிக்கையாளர்களுக்கும் சேவை நீடிப்புகளான கூட்டாண்மை Caller Tune சேவையையும் வழங்கும்" - என்றார்.

தம்மை வெளிப்படுத்துவதற்கு தொலைபேசியை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு உதவும் வகையில், SLT-MOBITELஇனால் ஒரு தடவை அறவிடப்படும் கட்டணம் மாத்திரம் இந்த சேவைக்காக அறவிடப்படும். பக்கேஜ்கள் அடிப்படை மற்றும் ப்ரீமியம் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. அடிப்படை பக்கேஜில் ஒரு பாடலை செயற்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன், ப்ரீமியம் பக்கேஜில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல் தெரிவுகளை மேற்கொள்ள முடியும் (Juke Box வசதியை போன்று). உள்வரும் அழைப்புகளுக்கு எழுமாற்றாக நான்கு பாடல்கள் வரை ஒலிக்கும்.

மேலும், மாதாந்த வாடகையாக பாடல் ஒன்றை தரவிறக்கம் செய்வதற்காக கட்டணம் அறவிடப்படும். அவ்வாறு தரவிறக்கம் செய்து கொண்ட பாடல்கள் 30 நாட்களுக்கான செல்லுபடியாகும் காலத்தைக்கொண்டிருக்கும் என்பதுடன், மாதாந்தம் புதுப்பிக்கப்படும்.

## கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் அத்தியாவசிய மருத்துவ சாதனங்களை Brandix கையளிப்பு

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளரான Brandix அத்தியாவசிய மருத்துவ சாதனங்களை கேகாலை மாவட்ட பொது வைத்தியசாலை, மாவனெல்ல பொது வைத்தியசாலை மற்றும் சீதுவ இடைத்தங்கல் சிகிச்சை நிலையம் ஆகியவற்றுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. சமூகத்தில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சைகளை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளுக்கு கைகொடுக்கும் வகையில் இந்த அன்பளிப்பை மேற்கொண்டுள்ளது. நிறுவனத்தின் "மனுசத்கார" எனும் சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டத்தின் நீடிப்பாக 12 வென்டிலேற்றர்கள் மற்றும் 18 ஒட்சிசன் செறிவூட்டல் அலகுகள் போன்றவற்றை இவ்வாறு அன்பளிப்புச் செய்திருந்தது.

கேகாலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த வென்டிலேற்றர்களை கையளிக்கும் ஏற்பாட்டு நடவடிக்கைகளை ரம்புக்கன Brandix Essentialsஇன் நிர்வாகத்தினர் முன்னெடுத்திருந்தனர். வைத்தியசாலையின் புதிய 'High Dependency Unit' (HDU) பிரிவுக்கு மொத்தமாக எட்டு அலகுகள் இவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. இதனூடாக கொவிட்-19 நோயாளர்களுக்கு அவசர சிகிச்சையளிக்கும்போது தேவைப்படும் ஒட்சிசன் வழங்கலை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கேகாலை மாவட்ட பொது வைத்திய சாலையின் HDUஅலகை பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் அங்குரார்ப்பணம் செய்திருந்தார். அமைச்சருடன் வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர் மிஹிரி பிரியங்கனியும் இணைந்து கொண்டு, இந்த அத்தியாவசிய உதவியை வழங்கியமைக்காக Brandix நிறுவனத்துக்கு நன்றி தெரிவித்தார்.

மாவனெல்ல பொது வைத்தியசாலைக்கு நான்கு வென்டிலேற்றர்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. ரம்புக்கன Brandix Essentials நிர்வாகத்தினர் இவற்றை மாவட்ட மருத்துவ அதிகாரி வைத்தியர் உதார குணதிலக்கவிடம் கையளித்தனர். மாவனெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த கொவிட் நோயாளர்களுக்கு உதவும் வகையில் இந்த சாதனங்கள் அமைந்திருக்கும்.

சீதுவ பகுதியில் நிறுவப்பட்டுள்ள இடைத்தங்கல் பராமரிப்பு நிலையத்துக்கு 18 ஒட்சிசன் செறிவூட்டல் அலகுகளையும் நிறுவனம் அன்பளிப்புச் செய்திருந்தது. Brandix வலையமைப்பின் முழுநேர தொழிற்சாலையாகத் திகழ்ந்து பின்னர் சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்ட இந்த வளாகத்தை, ஆண்டின் முற்பகுதியில் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்படுபவர்களுக்கு சிகிச்சையளிக்க உதவும் வகையில் அன்பளிப்புச் செய்திருந்தது. இதனை சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை இராணுவம் ஆகியன இயக்குகின்றன.



**பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், Brandix லங்கா லிமிடெட் பணிப்பாளர் சாதிக் ஒமார் மற்றும் Brandix Essentials (ரம்புக்கன) பொது முகாமையாளர் ருவன் குமார ஆகியோர் எட்டு வென்டிலேற்றர்களை கேகாலை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் மிஹிரி பிரியங்கனியிடம் கையளிப்பதைக் காணலாம்.**



**Brandix Essentials (ரம்புக்கன) பொது முகாமையாளர் ருவன் குமார மற்றும் மனிதவள பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் ரஞ்சித் ரணவீர ஆகியோர் நான்கு வென்டிலேற்றர்களை மாவனெல்ல பொது வைத்தியசாலையின் மாவட்ட மருத்துவ அதிகாரி வைத்தியர் உதார குணதிலக்கவிடம் கையளிப்பதையும் அருகில் பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.**



**Brandix லங்கா லிமிடெட் பணிப்பாளர் மற்றும் Moose Clothing கம்பனி நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஹசிப் ஒமார், மனிதவள பிரிவின் சிரேஷ்ட பொது முகாமையாளர் சுஜித் ஜயசேகர மற்றும் சீதுவ ICC பொறுப்பதிகாரி கேணல் யொஹான் பெர்னாண்டோ ஆகியோர் 18 ஒட்சிசன் செறிவூட்டல் அலகுகளை சீதுவ ICC மருத்துவ அதிகாரி வைத்தியர் அன்டன் பெர்னாண்டோவிடம் கையளிப்பதைக் காணலாம்.**